செந்தமிழ்ச் செல்வி

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக

மணிவிழா ஆண்டு

1920 — 1980



அரசு...

சிலம்பு-ருச] வளளுவர் ஆண்டு-உ0கக, ஆடி Aug '80 [பரல்-கஉ

'செந்தமிழ்ச் செல்வி'

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

உள்ளுறை

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு	திருவள்ளுவர் ஆண்டு உ0கக, ஆடி	பரல்
ருச	ஆகஃச்டு 1980	கஉ

சென்னை மறைமலையடிகள் நூல்நிலையம் முதல் புதிதாக உருவாகி வரும் மறைமலைநகர் வரை

நாகையிற் பிறந்து வேதாசலம் பிள்ளை என்னும் பிள்ளைத் திருப்பெயர் பெற்ற மறைமலையடிகட்கும் நெல்லை பாளையங்கோட்டையிற் பிறந்த திருவரங்கம் பிள்ளை அவர்கட்கும் ஏற்பட்ட தொடர்பு சிவநெறியும் தமிழ்நெறியும் வளர்ந்தோங்குவதற்கு ஏற்பட்ட சீரிய தொடர்பாகும்.

திருவர்ங்கம் பிள்ளை கொழும்பில் பெரிய வணிக நிலையத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தபோது துறவுபூண்டு பல்லாவரத்தில் வாழ்ந்துகொண்டிருந்த மறைமலையடிகளை 1914லிலும்—1917 லிலும் கொழும்புக்கு வரவழைத்துச் சொற்பொழிவாற்றச்செய்து பெரும் பொருள் ஈட்டிக்கொடுத்தனர். அங்கே 'திருசங்கர் கம்பெனி' என்னும் புத்தக வணிக நிலையம் தொடங்கித் திருவரங்கனார் நடத்திவந்தனர். 1918இல் கொழும்பைவிட்டுத் தாம்பிறந்த ஊரான பாளையங்கோட்டைக்கு வந்து, பின்பு பல்லாவரத்தில் அடிகளாரிடம் சென்றனர்.

சென்னை பவளக்காரத் தெரு பழைய எண் 2 (புதிய எண் 87) ஆம் இல்லத்தின் முகப்பு அறையில் திருசங்கர் கம்பெனியை நிறுவினர். திருவாசகம் நான்கு அகவல்கட்கு மறைமலையடிகள் விரிவுரை எழுத ஒப்புக்கொண்டபின் அதனைச் 'செந்தமிழ்க் களஞ்சியம்' என்ற தலைப்பில் 12 பகுதிகளாகத் திருவரங்கனார் வெளியிடுவாரானார். அப்படி வெளியிட்டுவருகையிலேதான் நெல்லையில் திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் மட்டிட்டது தொடங்கப்பெற்றது.

" செந்தமிழ்ச் செல்வி "

(இலக்கியத் திங்கள் இதழ்)

உறுப்பினர்கட்கு வேண்டுகோள்

அன்புடையீர் !

வணக்கம். செந்தமிழ்ச் செல்வியின் 54 ஆம் சிலம்பு இவ் விதழுடன் முடிந்து, வரும் ஆவணித்திங்கள் முதல் (செப்டம்பர் 12 ஆம் நாள்) 55 ஆம் சிலம்பு தொடங்குமாதலால் உறுப்பினர் வழக்கம்போல் தம்முடைய கையொப்பத் தொகையினை உடனடியாக அனுப்பிப் புதுப்பித்துக் கொள்ள வேண்டுகிறோம். அங்ஙனம், அனுப்பிவைக்காத உறுப்பினரின் ஆதரவை எதிர்நோக்கி அடுத்த சிலம்பின் முதல் இதழ் பெறுமதி அஞ்சலில் (V.P.P.) அனுப்பி வைக்கப்பெறும். அதனை வேண்டாதோர் முன் கூட்டியே அறிவித்துவிடுதல் நலமாகும்.

ஆசிரியர்

செந்தமிழ்ச் செல்வி

1927 ஆம் ஆண்டில் மறைமலை அடிகள் திருமகள் நீலாம்பிகை யம்மையாரை மணம்செய்துகொண்டபின் திருவரங்கனார் நெல்லை யிலும் அவர்கள் தம்பி இப்போதைய கழக ஆட்சியாளர் சென்னை யிலும் கழகத்தை நடத்திவரலாயினர். 1944இல் திருவரங்கனாரும், 1945-ல் அவர்கள் மனைவியார் நீலாம்பிகையம்மையாரும் இறையடி சேர்ந்தனர். 1948இல் சென்னையில் அப்பர் அச்சகம் தொடங்கப் பெற்று 1949 முதல் சென்னை பிராட்வே எனப்படும் பிரகாசம் சாலை யில் இப்போதைய 80ஆம் எண் இல்லத்தில் சிறப்புற நடைபெற்று வருகிறது.

17—9—1948இல் அம்மை அம்பலவாணர் உணர்த்தியபடி தமது நூல்நிலையத்தையும், தாம் வாழ்ந்துவரும் பல்லாவரம் மாளிகை யையும் விலைக்கு வாங்கிக்கொள்ளும்படி மறைமலையடிகளார் ஆட்சி யாளர் வ. சுப்பையா பிள்ளைக்குக் கடிதம் எழுதியுள்ளார். அக் கருத்து நிறைவேறவில்லை. 15—9—1950இல் இறையடி சேர்வதற்கு ஒரு கிழமைக்கு முன் அடிகளார் தாம் எழுதிய விருப்ப ஆவணத்தில் தாம் தொகுத்து வைத்திருக்கும் நூல்களைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ஏற்றுப் பொது மக்களுக்குப் பயன்படும்படி தமது பெயரில் நூல் நிலையம் நடத்துமாயின் அவற்றை ஒப்புவிக்குமாறும், தாம் எழுதிய நூல்களைக் கழகவழி வார (ராயல்டி) முறையில் அச்சிடுமாறும் எழுதியுள்ளனர்.

இவ் விருப்ப ஆவணத்தின் பேரில் உயர்நீதிமன்றத்தில் 1953இல் நடைபெற்ற வழக்கில் விருப்ப ஆவணம் அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டது, அவ் வழக்கின் தீர்ப்பின்மீது மேல் நிலை வழக்கு தொடங்கப்பெற்றது. 1957இல் இரண்டு நீதிபதிகள் முன்பு ஆய்வுக்கு வந்தது. மூன்றுநாட்கள் தொடர்ந்து நடை பெற்ற ஆய்வுக்குப்பின் ஒருகிழமையில் தீர்ப்பு கூறப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அப்படித் தெரிவிக்கப்பட்ட மறுநாள் இலிங்கிச்செட்டித் தெருவில் அப்போதைய எண் 105 (இப்போதைய எண் 261) என்ற பெரிய மாடிவீடு விற்பனைக்கு வந்தது.

அம் மாடி வீடு வள்ளல் இராமலிங்க அடிகள் 1832ஆம் ஆண்டில் முதன்முதல் தமது 9ஆவது அகவையில் சொற்பொழிவு ஆற்றிய திருவருள்நிறை இல்லமாகும். வழக்கின் முடிபு தெரிவிக் கப்படுமுன்பே கட்டடம் விலைக்கு வாங்கப் பெற்றது. வழக்கு கழகத் துக்குச் சார்பாகக் கூறப்படவும் அக் கட்டடத்தைச் சீர்திருத்தி நூல் நிலையம் 24—8—1958இல் மறைமலையடிகளார் பெயரால் தொடங் கப்பெற்றது.

பல்லாவரத்தில் அடிகளார் வாழ்ந்த கட்டடத்தை விற்று முதல் செய்து அதனால் கிடைக்கப்பெறும் தொகையினை

இன்னின்னாருக்கும் இன்னின்ன செயல்களுக்கும் பிரித்துக் கொடுக்கவேண்டும் என அடிகளாரின் விருப்ப ஆவணத்தில் குறிக்கப்பெற்றிருந்தது. அடிகளார் வாழ்ந்த மாளிகை கழகப் பொறுப்பிலே இருப்பது நலமெனக் கருதிக் கட்டடப் பொறிஞரைக் கொண்டு விலை ரூ. 40,000 மதிப்பிடப்பெற்றது. அப்போதைய தமிழ்நாடு நிதியமைச்சர் மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்களிடம் தெரிவிக்கவே, அவர்கள் நடுவண் அரசுக்குப் பரிந்துரை செய்து ரூ. 25,000 வழங்கச்செய்ததோடு, தமிழக அரசு வழி ரூ. 10,000மும் வழங்கச்செய்தார்கள். எஞ்சிய ரூ. 5,000 கழக வழிக் கொடுத்து, கழக அறநிலையங்களில் ஒன்றாகிய திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கத்திற்கு எழுதி வாங்கப் பெற்றது. அதைச் சீர்திருத்தம் செய்து கலைமன்றமாக்குவதற்கு மேலும் ரூ. 20,000 வரை செலவிடப்பெற்றது. கழகம் அங்கு ஒரு நூல்நிலையம் நடைபெறவும், அடிகளார் கலைப்பொருள்களும், புலவர் திருவுருவப் படங்களும் காட்சியளிக்கவும் ஏற்பாடு செய்துள்ளது. பல்லாவரத்தில் அடிகளார் திருப்பெயரில் அமைக்கப் பெற்ற கலைமன்றத்துக்குச் செல்லும் வழியிலுள்ள உயர்நிலைப் பள்ளிக்கு அடிகளார் திருப்பெயர் வைக்கப்பெற்றது.

கலைமன்றக் கட்டடத்தின் வடபக்கம் தோட்டம் பெருக்கமாகவும், தென்பக்கம் சுருக்கமாகவும் அப்போது இருந்தது. ஈராண்டுக்கு முன்பு தென்பக்கம் காலிமனை விலைக்கு வாங்கப்பெற்றபின் கட்டடம் மையமாக அமைந்து அழகுதரும் நிலையினைப் பெற்றுள்ளது.

சென்னையில் நூல்நிலையமும், பல்லாவரத்தில் கலைமன்றமும் அமைந்திருப்பதைக் கண்ட அப்போதைய முதலமைச்சர் மாண்புமிகு கருணாநிதி அவர்கள் சைதாப்பேட்டையில் புதிதாக அமைக்கப் பெற்றுள்ள அடையாற்றுப் பெரும் பாலத்துக்கு 'மறைமலையடிகளார் பாலம்' என்று பெயரிட்டுப் புகழ்பெற்றனர். பின்பு சென்னையிலிருந்து செங்கல்பட்டுக்குப் போகும் பெருவழியில் 48 ஆவது கிலோ மீட்டர் தொலைவில் காட்டாங்குளத்தூர் என்ற ஊரின்கண் "மறைமலை நகர்" என்ற நகர் அமைப்பதற்குக் கலைஞர் கருணாநிதி அவர்கள் திட்டமிட்டபடி நகர் உருவாகி வருகின்றது. அங்கும் மறைமலையடிகளார் பெயரில் கலைக்கோயில் ஒன்று அமைப்பதற்கு இடந்தருவதோடு கட்டடம் கட்டித் தருவதாகவும் நகரமைப்பு ஆட்சிக் குழுவினர் இசைவு தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு சங்கிலித் தொடர்போல் சென்னையில் மறைமலையடிகள் நூல்நிலையம், சைதாப்பேட்டையில் மிகப் பெரிய அடையாற்றுப் பாலம், பல்லாவரத்தில் மறைமலையடிகள் திருப்பெயரில் உயர்நிலைப்பள்ளி, அடுத்துச் சாவடித் தெருவில் மறைமலையடிகள்

கலைமன்றம், அடுத்து நெடுஞ்சாலையோரம் புதிதாக உருவாக்கப் பெற்றுவரும் மறைமலை நகரில் 'மறைமலையடிகள் கலைக்கோயில்' போன்றன அமைவதற்குக் கழகம் தொடங்குவதற்கு ஊக்குவித்த அருட்செல்வரும் கூட்டமைச்சர்களும், சிவ நெறியும், தமிழ் நெறியும் வளர்க்கவேண்டும் என்ற கொள்கையில் நெறி பிறழாது நின்றமையே அம்மை அம்பலவாணர் திருவருளேயாகும்.

இங்கே திருக்குறள் 'ஒப்புரவு அறிதல்' என்ற அதிகாரத்தில் காணும் மூன்று குறள்களும் நினைவு கூரற்பாலன.

''ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு'' 215

''பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்'' 216

''மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்'' 217

மறைமலையடிகளார் திருவுருவச்சிலை திறப்பு: அடிகளார் பிறந்த நாகபட்டினத்தில் நாகை தமிழ்ச் சங்கத்தார் முயற்சியினால் 19—6—1969இல் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் தமிழகத் தலைமை அமைச்சர் மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் திரளான பெருமக்கள் முன்னிலையில் திறந்துவைத்தனர். கோவை இளஞ்சேரன் அவர்கள் பெரு முயற்சியினால் சிலைதிறப்பு விழா மிகவுஞ் சிறப்பாக நடைபெற்றதெனின் வெறும் புகழ்ச்சியன்று. இதன்வழித் தனித் தமிழ் மன்னர் மறைமலையடிகளார்மீது கலைஞர் கருணாநிதி அவர்கள் கொண்டிருந்த பற்று புலனாகின்றது. சிலைத் திறப்பு, நடத்தியபின் சைதைப் பெரிய பாலத்துக்கு அடிகளார் திருப்பெயர் சூட்டியதோடு காட்டாங்குளத்தூரில் மறைமலை நகர் அமைப்பதற்குத் திட்டம் இட்டது ஆகியவற்றால் எத்துணைப் பற்றுக் கொண்டிருந்தார் என்பது நன்கு புலனாகின்றதன்றோ!

சென்னையில் கடற்கரை யோரமுள்ள போர்நினைவுக் கல்மண்டபத்தின் தென்புறமுள்ள முக்கோணத் திடலில் இரும்புப் பாலத்தை நோக்கித் தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளார் சிலை திறப்பது பற்றிக் கழகம் எழுதிக் கேட்டதற்கு இசைவு அளித்தனர். ஆனால் சிலையினைச் செய்யும் பொறுப்பினை மட்டும் அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே அத்திட்டம் அந்த அளவில் நின்றுவிட்டது. அதனை நிறைவேற்றும்படி இப்போதைய புரட்சித் தலைவர் தமிழக முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வோம்.

—வ. சு.

சங்க இலக்கியத்தில் தடவும் பிடவும்

[திரு. பி. எல். சாமி, ஐ. ஏ. எசு.]

சங்க இலக்கியத்தில் தடவு, பிடவு என்ற இருமரங்கள் கூறப் பட்டுள்ளன. இந்த மரங்கள் அறிவியற்படி எவை என்பதை ஆராயலாம்.

''தடவி னோங்குசினைக் கட்சியிற் பிரிந்தோர்''
—குறுந்தொகை 160

''தடவும் பிடவும் தாழச் சாய்ந்தது''
—பெருங்கதை 1 : 51 : 43

தடவு என்ற மரத்தைப்பற்றிச் சங்க நூல்களில் குறுந்தொகையில் மட்டுமே சிறு குறிப்பு வந்துள்ளது. பெருங்கதை தடவு என்ற பெயரை மட்டுமே குறிப்பிட்டுள்ளது. இருப்பினும் இந்த மரத்தின் பெயர் தெலுங்குப் பேச்சு மொழியில் வழங்குவதிலிருந்து இந்த மரம் அறிவியற்படி எந்த மரம் என்று கண்டுகொண்டேன். தமிழிலும் பேச்சு வழக்கில் வடஆற்காடு, கோயமுத்தூர் மாவட்டங் களில் தடா என்ற பெயர் சில ஆண்டுகளுக்குமுன் வழங்கியதாகத் தெரிகின்றது. தமிழில் பிற இடங்களில் இந்த மரத்தைப் 'பொலவு' என்றழைக்கின்றனர். தடாமரம் காடுகளில் காணப்படுவது. தடா என்ற மரம் இருந்த காடுகள் இருந்த ஊரைத் 'தடா' என்று இன்றும் ஆந்திர நாட்டில் அழைப்பதைக் காணலாம். நெல்லூருக்கு அருகில் உள்ள ஊர். உ. வே. சாமிநாதய்யர் தடாவின் இலைகள் உணவுக்கலமாகத் திருக்காளத்தி முதலிய இடங் களில் பயன்படுவதாக எழுதினர்.

தடாவின் உலர்ந்த இலை இன்றும் உணவுக்கலமாகப் பயன் படுத்தப்படுகின்றது. இதன் இலை மந்தார இலை போன்று நடுவில் பிரிந்து காணப்படும். ஆனல், இலை மிகவும் அகலமானது. இப்போது உணவகங்களில் பயன்படுத்தப்படும் காய்ந்த இலைகளைப் பெரிய மந்தாரை என்றழைப்பர். இது பீகார் முதலிய வடநாட்டு மாநிலக் காடுகளில் இருந்து வருவதாகும். இதுவும் ஒரு வகைத் தடா மரமாகும். தடா மரத்தில் நான்கு வகைகள் உண்டு. தெலுங்கு மொழியில் வழங்கும் தடா மரமே குறுந்தொகையில் கூறப்பட்டதாகும். இதைச் செடிநூலார் [Pteros Permum Hyneanum (wall)] என்றழைப்பர். செங்கற்பட்டு மாவட்டத்தில் இந்த மரம் ஒரு காலத்தில் காணப்பட்டது. இப்போது அழிந்து

விட்டது. இதைத் தமிழில் 'போலவு' என்றும் அழைத்தனர். இதன் பிறவகைகளை வட்டப் பொலவு, சிற்றிலைப் பொலவு என்றும் தமிழகத்தில் சில மாவட்டங்களில் அழைத்தனர்.

தெலுங்கு மொழியில் சில இடங்களில் 'லொலகு' என்றழைத்தனர். பொலவு என்ற தமிழ்ப் பெயர் போன்று இப் பெயர் உள்ளது. கம்பராமாயணத்தில் 'சிற்றிலை' என்ற பெயரில் ஒரு மரம் கூறப்பட்டுள்ளது. இது ஒரு வேளை சிற்றிலைப் பொலவு என்று அழைக்கப்படும் மரமாக இருக்கலாம். சிற்றிலைப் பொலவைச் செடிநூலார் (Pterospermum Diversifolium) என்றழைப்பர். தடா மரத்தின் இன்னொருவகையை வட்டப் பொலவு என்றழைத்தனர். இதன் கிளைகள் கிடைமட்டமாகக் காணப்படுவதால் 'வட்டப் பொலவு' என்றழைத்தனர். பம்பரம் போன்று கீழே இருந்து மேலே இந்த மரம் தோன்றியதால் பம்பரம் என்ற பெயரில் தெலுங்கில் அழைத்தனர். குறிஞ்சிப்பாட்டில் கூறப்பட்ட நூறு மரஞ் செடி கொடிகளில் கடைசியாகக் குறிப்பிடப்பட்டது 'செம்பூப்புழகாகும்'. இதை மலையெருக்கம்பூ என்று நச்சினார்க்கினியர் உரை கூறினார். மலையில் வாழும் தனித்த எருக்கஞ் செடி இல்லை. வெள்ளை நிறமும், ஊதா நிறமும் உடைய எருக்கஞ் செடிகளே இயற்கையில் உள்ளன. ஆதலின் நச்சர் கூறிய பொருள் பொருத்தமாகத் தெரியவில்லை. புழகு என்ற பெயர் தமிழில் பொலவு என்றழைக்கப்பட்ட வட்டப் பொலவாகவோ, சிற்றிலைப் பொலவாகவோ இருக்கலாம். புழகு என்ற பெயர் மக்கள் வாயில் பொலவு என்று மாறியிருக்கலாம். புழுகுப் பூனையை புனுகுப் பூனை என்று இக்காலத்தில் அழைப்பதைக் காணலாம். பேச்சு வழக்குப் பெயர்கள் கட்டளைத் தமிழாக அல்லது நாளிதழ்களின் வாயிலாக சென்னைத் தமிழாக மாறுமுன் அவற்றைச் சேர்த்து ஆராய்வது (Dialectical names) மிகவும் தேவையானதாகும்.

'தடா' என்ற பெயர் வந்ததின் தோற்றத்தையும் ஆராய வேண்டும். 'தடவு' என்ற சொல் வளைவு என்ற பொருளை உடையதாகும். தொல்காப்பியத்தில் உரிச்சொல்லிலக்கணத்தில் 'தடா' என்ற சொல் வளைவு என்ற பொருளைத் தரும் என்று கூறப்பட்டுள்ளதைக் கவனிக்க வேண்டும். 'அவற்றுள், தட என்கிளவி கோட்டமும் செய்யும்' (சொல்லதிகாரம் 315) என்று தொல்காப்பியம் கூறியுள்ளது. இந்த மரம் ஓரளவு வளைவு உடையதுதான். யாப்பருங்கல விருத்தியுரையில் காட்டப்பட்ட மேற்கோள் பாடலில் 'இடவ குடவ தடவ' ஞாழலும் என்ற வரி வருகின்றது. இடவ என்பது இடது பக்கமாகவும், குடவ என்பது குழிந்தும், தடவ

என்பது வளைந்தும் காணப்பட்டது என்று கூறிய சொற்பொருள் நயம் மிகவும் பாராட்டத்தக்கதாகும். நான் சிதம்பரத்தின் அருகில் உள்ள பிச்சாவரம் கடற்கழிக்காடுகளில் உள்ள மரங்களை ஆராய்ந்தபோது ஞாழல் மரத்தையும், கண்டல் மரவகைகளையும், தில்லை மரத்தையும் பார்த்தேன். இந்த மரங்கள் எல்லாம் ஓரளவு பொதுவாக 'இடவ குடவ தடவ' என்ற விளக்கத்திற்குப் பொருத்த மாகக் காணப்பட்டன.

நான் படகில் கழிகளில் சென்றபோது படகோட்டி சில இடங்களில் நீர்குத்தி ஆழமாக இருக்கும் இடங்களை 'குடுவை' என்ருன். புதுவையில் சுண்ணும்பு ஆற்றின் பாலத்தில் பண்டைக்காலத்துத் தூண்கள் உள்ளன. வெள்ளம் வரும் காலத்தில் தூண்களுக்கு அருகில் நீர்குத்தி இரண்டாள், மூன்ருள் ஆழம் உடைய நீர்ப் பரப்பை 'குடுவை' என்று மீனவர் அழைக்கின்றனர். இந்தக் குடுவையில் 'கொடுவா' என்ற கடல்மீன் நன்னீரில் வாழ்ந்து பெரிதாக வளர்கின்றது. இதன் வாய் பெரியதாகவும் அகலமாகவும் காணப்படுவதாலும் இந்த மீன் கொடுவாய் என்ற விலங்குகளைத் தின்னும் புலியைப் போலப் பிற மீன்களைத் தின்னுவதாலும் 'கொடுவா' என்றழைக்கப்படுகின்றது. அண்மையில் மலையாள மொழியில் 'கொடுவாயைப் பிடித்த கிடுவா' என்ற பெயரில் ஒரு நிழற்படம் வந்தது. புலியைப் பிடித்த சிறுவன் என்ற பொருளில் வந்தது. ஆட்கொல்லிப் புலியின் வாய் கொடுவாய். அதனுல்தான் 'கடுவா' என்று நாட்டார் மக்கள் தமிழில் புலியை அழைக்கின்றனர். (தொடரும்.)

———

தமிழில் சொன்னுல் இழிவா?

ஒரு வள்ளலின் பெயர் 'பாம்பண கவுண்டன்' என்பது. அவன் குறவஞ்சி நூலால் பாடு புகழ் பெற்றவன். அவனைப் பற்றிப் பார்ப்பனர் சிலர் 'பாம்பணன்' என்பது 'ஒரு துஷ்ட உயிரின் பெயர்' என்று கூறியதைக் கேட்டார் பாம்பணனின் தாயார். அவர், ''ஐயரே, 'சேசண்ணு' என்ருல் உங்களுக்குப் பெருமையாகத் தெரிகிறது. அதைத் தமிழில் 'பாம்பணன்' என்ருல் இழிவாகத் தெரிகிறதோ? இது தமிழிடத்தும் தமிழரிடத்தும் உங்களுக்குள்ள 'அசூயையை'க் காட்டுகிறது !'' என்ருர்.

—கலைமணி.

தேவாரமும் சிற்பக்கலையும்

[தி. இராசமாணிக்கம், பி. ஏ., பி. காம்., விசாரத், திருநெல்வேலி.]

சைவத்திருமுறைகள் பன்னிரண்டில் முதல் ஏழு திருமுறைகள் திரு அருட்செல்வர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் மற்றும் சுந்தரர் ஆகிய மூவரால் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடப்பெற்ற தேவாரத் திருப்பதிகங்களாம். இவர்கள் 1,03,000 பாடல்கள் பாடியதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், தற்போது கிடைத்தவை 7,950 பாடல்கள்தாம். இவர்களில் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் சமகாலத்தவர்கள். இவர்கள் ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்தவர்கள். சுந்தரர் 9ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவராகக் கருதப்படுகிறார்.

தேவாரம் பாடிய மூவரில் சம்பந்தரும், அப்பரும், வீழ்ச்சியுற்ற சைவ சமயத்தில் மறுமலர்ச்சி ஏற்படுத்தி அது தழைத்து ஓங்க அயராது உழைத்த உத்தமர்கள். போக்குவரவு, வசதியே இல்லாத ஒரு காலத்தில் இவர்கள் கால்நடையாகவும் பல்லக்கிலும் சென்று ஆங்காங்கே எழுந்தருளியுள்ள இறைவன்மீது தெய்வ மணம் கமழும் பாமாலைகளைச் சூட்டி மக்களிடையே பக்தி நெறியை வளர்த்தார்கள். சுந்தரர் தமது திருப்புன்கூர் திருப்பதிகத்தில்,

> ''நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் நாவினுக்கரையன்''

என்றும் திருவலிவலம் திருப்பதிகத்தில்,

> ''நல்லிசை ஞானசம்பந்தனும் நாவுக்கரசரும் பாடிய
> நற்றமிழ்மாலை''

என்றும் குறிப்பிடுகிறார். மேலும் தமது திருக்கோலக்காத் திருப்பதிகத்தில்,

> ''நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தன்''

என்று போற்றுகிறார். இவற்றினின்றும் தேவாரத் திருப்பதிகங்கள் மக்களிடையே பக்திநெறியை மட்டும் வளர்க்கவில்லை; இசையை வளர்த்தன; தமிழைப் பரப்பின என்பது தெளிவாகிறது. இத்துடன் இவை நிற்கவில்லை; இவை சிற்பக்கலையின் வளர்ச்சிக்கும் உறு துணையாக நின்றன.

பல்வேறு இலக்கியங்களின் அடிப்படையில் இலக்கணம் வகுக்கப்பட்டது. இலக்கணம் வகுக்கப்பட்டபின் இயற்றப்பட்ட இலக்கியங்கள் இலக்கணத்தைத் தழுவி இருக்கவேண்டும் என்பது யாவரும் அறிந்த ஒன்றே. இதேபோன்று கலேத்திறமை மிக்க சிற்பிகள் இறையிடத்து ஆழ்ந்த அன்பில் ஒன்றி, எழிலார்ந்த வடிவங்களேப் படைத்தனர். மகாகவி பாரதியார்,

''உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்''

என்ருர். எனவே சிற்பிகளின் உள்ளங்களில் உண்மையான தெய் வீக ஒளி இருந்தாலன்றி அவர்களுடைய கைகள் கலேவண்ணம் மிக்க கவின்மிகு படைப்புக்களேப் படைக்க இயலாது. இத்தகு படைப்புக்களின் அடிப்படைகளேக்கொண்டே 9 முதல் 12ஆம் நூற்ருண்டுகளிற் சைவ மற்றும் வைணவ ஆகமங்கள் தோன்றின வாகத் திரு. கோபிநாதராவ் கருதுகிருர். சைவ, வைணவ ஆகமங்கள் தோன்றியபின் படைக்கப்பட்ட சிலாவடிவங்கள் அவற்றை ஒட்டியே உருவாக்கப்பட்டன. அவை தோன்றுவதற்கு முன்பு சிற்பிகள் திருஅருட்செல்வர்களின் திருப்பதிகங்களில் திளேத்து, தம்மை இழந்து, எழிலார்ந்த படைப்புக்களே அமைத் திருக்க வேண்டும். திருவருட் செல்வர்களது திருவாக்கிற்கு ஏற்ற வகையில் தெய்வீக வடிவங்களே உருவாக்கியிருக்கவேண்டும்.

கறைகொள் கண்டனே, சாமவேத கானப் பிரியன் எனப் புராணங்கள் கூறும். இதைத் திருஞானசம்பந்தப் பெருமான் தமது திருப்பதிகங்களில் பொதுவாக எட்டாவது பாட்டில் வலியுறுத்து கிருர். எடுத்துக்காட்டாக, திருக்குடந்தைக்காரோணத் திருப்பதி கத்தில்,

''வரையார்திரள்தோள் மதவாளரக்கன் எடுப்ப மலேசேரும்
விரையார் பாதம் நுதியா லூன்ற நெரிந்து சிரம்பத்தும்,
விரையார் கீதம் பாடக்கேட்டங் கொளிவாள் கொடுத்தாரும்''

என்ற பாடலுக்கு உகந்து அருள் பாலிக்கும் தன்மையைப் போற்றுகிருர். இங்ஙனம் இசையில் இன்பம் காணும் இறைவன் வீணேவாசிப்பதில் நாட்டம் கொண்டவன் என்பதைச் சம்பந்தப் பெருமான் தனது கோளறு திருப்பதிகத்தில்,

''மிகநல்ல வீணே தடவி''

என்று குறிப்பிடுகிருர். இருப்பினும் சிவபெருமானின் ஆலமர் செல்வனின் வடிவத்தைத் தவிர ஏனைய வடிவங்களில் வீணே அமைக்கப்படுவதில்லே. சைவ ஆகமங்களில் ஆலமர் செல்வனின்

வடிவை 4 வகைகளாகக் கொண்டு, அவற்றில் ஒன்று வீணுதர தட்சணுமூர்த்தி என்று சொல்லப்பட்டுள்ளது.

தென்னகத்திற்கே உரிய பிச்சைஉகக்கும் பெம்மானின் வடிவங்களான கங்காளமூர்த்தி, பிச்சாடனமூர்த்தி வடிவங்களின் கைகளில் கங்காளம், சூலம், கபாலம் ஆகியவை உள்ளனவாக அமைக்கப்படவேண்டும் என ஆகமங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனுல், திருநாவுக்கரசர் தமது திருவலம்புரம் திருத்தாண்டகத்தில்,

> ''முறித்ததொரு தோலுடுத்து முண்டஞ் சாத்தி
> முனிகணங்கள் புடைசூழ முற்றந்தோறுந்
> தெறித்ததொரு வீணையராய்ச் செல்வார்''

என்றும்,

> ''வட்டணைகள் படநடந்து மாயம்பேசி''

என்றும் குறிப்பிடுகிருர். திருவலம்புரம் என்பது தஞ்சை மாவட்டத்தில் உள்ள மேலப்பெரும்பள்ளமாம். அங்குள்ள தட்சணபுரீசுவரர் ஆலயத்தில் பிச்சாடனமூர்த்தியின் இரு கைகளும் வீணைபிடித்து வாசிப்பது போன்று உள்ளனவாகத் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தமது 'பிற்காலச் சோழர்கள் ஆலயங்கள்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்த வடிவம்தான் அப்பர் திருவாக்கால் ''வட்டணைகள் படநடந்த நாயகர்'' என்று சொல்லப்படுவதாக டாக்டர் நாகசாமி கருத்து தெரிவித்துள்ளார். இதனினின்றும் இவ்வடிவை உருவாக்கிய சிற்பி அப்பர் திருவாக்கிலே மனம் ஒன்றி, சைவ ஆகமங்களில் குறிப்பிடாத, எங்கும் காண் உற்கரிய அருமையான படைப்பைப் படைத்துள்ளான் என்பது தெளிவாகிறது.

சிவபெருமானின் எட்டு வீரச் செயல்களில் ஒன்ருகக் கருதப் படுவது கயமுகாசூரனைக் கொன்றது. இது நடைபெற்றதாகக் கொள்ளப்படும் இடம் மாயூரத்தை அடுத்த வழுவூர். இந்த வடிவினை எல்லா ஆலயங்களிலும் காணலாம். அம்பாசமுத்திரத்தை அடுத்த திருவாலீசுவர ஆலயவிமானத்தின் வடபுறமாக உள்ள சாலை என்ற பகுதியில் யானை உரிபோர்த்த வடிவம் அமைக்கப் பட்டுள்ளது. யானை முகாசூரனைக் கொன்றபின் அவன் உடலைத் தனக்குப் பின்னுல் ஒளிமண்டலம் போன்று தனது இரண்டு கைகளால் போர்த்துக்கொண்டுள்ளார். யானையின் தலைமீது இடக் கால் ஊன்றிய நிலையில் உள்ளது. சடாமுடி பரந்து உள்ளதும், உடல் வளைந்து உள்ளதும் அரக்கனைக்கொன்ற வேகத்தைக் காட்டுகின்றன. அன்னை பராசக்தி இதைக் கண்ணுற்று, அஞ்சி,

அவ்விடத்தை விட்டு அகல்வது போன்று காட்டப்பட்டுள்ளது. இதைச் சம்பந்தப்பெருமான் பல இடங்களில் பாராட்டியுள்ளார். எடுத்துக்காட்டாக, திருவியலூர் திருப்பதிகத்தில்,

''குரவம்கமழ் நறுமென் குழல் அரிவையவள் வெருவப்
பொருவெங்கரி படவென்றதன் உரிவையுடன் அணிவோன்''

என்றும், திருச்சேய்ஞலூர் திருப்பதிகத்தில்,

''வேயடைந்த தோளியஞ்ச வேழம் உரித்ததென்னே''

என்றும், திருக்கழுமலம் திருப்பதிகத்தில்.

''வேய்புரைதோளி
வரிதரு கண்ணிணை மடவரலஞ்ச மஞ்சுற நிமிர்ந்ததோர்
வடிவொடும் வந்த
கரியுரி மருவிய அடிகள்''

எனக் குறிப்பிட்டுள்ளார். எனவே இங்குள்ள யானை யுரிபோர்த்த வடிவம் திருஞானசம்பந்தப் பெருமானின் வாக்கிற்கு ஓர் இலக்கிய மாக அமைந்துள்ளது என்றால், அது மிகையாகாது.

சிவபெருமானின் பல்வேறு அருள்பாலிக்கும் வடிவங்களில் சண்டிகேசுவர அனுக்கிரகமூர்த்தி தமிழகத்திற்கே தனிச் சிறப்பு உடைய ஒன்றாம். சண்டிகேசுவர நாயனார், 63 நாயன்மார்களில் ஒருவர். இவர் தேவாரம் பாடிய மூவர் காலத்திற்கு முற்பட்டவர். இவரை மூவரும் தம் திருப்பதிகங்களில் விதந்து உரைத் துள்ளனர். ஞானசம்பந்தப்பெருமான் தமது திருச்சேய்ஞலூர் திருப்பதிகத்தில்,

''பீரடைந்த பாலதாட்டப் பேணாதவன் தாதை
வேரடைந்து பாய்ந்ததாளை வேர்தடிந்தான் தனக்குத்
தாரடைந்த மாலைசூட்டித் தலைமை வகுத்ததென்னே''

என்றும், திருக்கோளிலி திருப்பதிகத்தில்,

''வந்த மணலால் இலிங்கம் மண்ணியின்கட் பாலாட்டும்
சிந்தை செய்வோன் தன்கருமந் தேர்ந்து சிதைப்பான் வருமத்
தந்தைதனைச் சாடுதலுஞ் சண்டீச னென்றருளிக்
கொந்தணவும் மலர் கொடுத்தான் கோளிலியெம் பெருமானே''

என்றும் சண்டேசருக்கு இறைவன் அருள்பாலித்ததைக் குறிப் பிடுகிறார். திருநாவுக்கரசரும் தமது திருச்சாய்க்காடு திருப்பதி கத்தில்,

"ஆமலி பாலும் நெய்யும் ஆட்டிஅர்ச் சனைகள் செய்து
பூமலி கொன்றை சூட்டப் பொருததன் தாதை தாளைக்
கூர்மழு வொன்றால் ஓச்சக் குளிர்சடைக் கொன்றை மாலை
தாமநற் சண்டிக் கீந்தார் சாய்க்காடு மேவி னாரே"

என்று குறிப்பிட்டார். சுந்தரர் தமது திருப்புன்கூர்த் திருப்பதிகத்தில்,

"கோதனங்களின் பால்கறந்தாட்டக் கோலவெண்மணற்
சிவன்றன் மேற்சென்ற
தாதைதாள் அறஎறிந்த சண்டிக்குன் சடைமிசைமலர்
செயக்கண்டு"

என்று இறைவன் திருக்கருணையை வியந்து பாராட்டுகிறார்.

தன் பூசனைக்குரிய இலிங்கத்தைத் தனது காலால் இடறி, இடையூறு விளைவித்த தந்தையைத் தந்தையெனக் கருதாது தன்கையில் இருந்த மழுவால் தன் தந்தைதாளை வெட்டிய அன்பனுக்குத் தன் தலையில் இருந்த கொன்றை மாலையைச் சூட்டி அருளியதாகத் தேவாரம் பாடிய மூவரும் குறிப்பிட்டுள்ளனர். திருவாலீசுவர ஆலய விமானத்தின் வடபுறத்தில் சண்டிகேசுவர அனுக்கிரகமூர்த்தி அமைக்கப்பட்டுள்ளது. சண்டிகேசுவரர் வணங்கும் நிலையில் காணப்படுகிறார். அவரது தலையில் மாலையை அணிவித்து அருள்பாலிக்கும் வண்ணம் அண்ணல் உருவாக்கப்பட்டுள்ளான். அன்னைபீடத்தில் அமர்ந்து இடக்காலை நந்தியின் மீது வைத்துள்ள நிலையில் காணப்படுகிறாள். அண்ணல் அரனே ஓர் உருவம் கொண்டாற்போன்றும், சண்டிகேசுவரர் இறைவனிடத்தில் கொண்டுள்ள ஆழ்ந்த அன்பின் வடிவாகவும் உருவாக்கப்பட்டுள்ளது. கண்டு இன்புறத்தக்கது. இதை அமைத்த சிற்பி தேவாரப்பாடல்களில் தன் மனம் ஒன்றி, அதன் விளைவாக இதைப் படைத்திருக்கவேண்டும் எனக் கொள்ளலாம்.

சைவத்தைத் தழைக்கச்செய்து, மக்களிடையே பக்திநெறியை வளர்க்கத் தோன்றியவை தேவாரத்திருப்பதிகங்கள். சமய மறுமலர்ச்சியுடன், தெய்வீகத் தீந்தமிழால் பாடப்பெற்ற தேவாரப் பாடல்களால் தமிழ்மொழி வளப்பம் பெற்றது; இசையும் வளர்ச்சி உற்றது. இப் பாடல்களில் திளைத்த சிற்பிகள் பல்வேறு நுணுக்கங்களைக்கொண்ட மனத்தைக் கொள்ளைகொள்ளும் அழகின் உறைவிடங்களான சிலாவடிவங்களைப் படைக்கவும் இவை உதவியதன் வாயிலாகச் சிற்பக்கலையும் முன்னேற்றம் கண்டது.

———

மலையாளப் பழமொழிகள்

[இரா. மதிவாணன் க. மு.]

பழஞ்சேர நாடாகிய மலையாளத்தில் பண்டைத் தமிழ் நலங் கெழுமிய பழமொழிகள் மிக்குள்ளன. 'பதினாயிரம் பழஞ்சொல் லுகள்' என்னும் பழமொழி நூல் மலையாள மொழியில் வெளிவந் துள்ளது. கிருட்டிணன் நாயர் என்பவர் 1200 மலையாளப் பழமொழிகளை அவற்றுக்கீடான இந்தி ஆங்கிலப் பழமொழி களுடன் லோகோக்தி மாலா என்னும் பெயரில் வெளியிட்டுள்ளார். பழமொழிகளை மலையாளிகள் 'பழஞ்சொல்' என வழங்குகின்றனர்.

மலையாளப் பழமொழிகளை ஆராய்ந்த மலையாளமொழி அறிஞர்கள், இன்றைய மலையாளமொழியில் அறவே இல்லாத புதுச்சொற்கள் பலவற்றைப் பழமொழிகளில் காண்பதாக வியக் கின்றனர். அவை தமிழ்ச்சொற்களாக இருப்பதன் வரலாற்றுண் மையும் அவர்களுக்கு விளங்குகிறது. சான்றாக, பூனையை மலையாளமொழியில் 'பூச்ச' என்பர். பூனையென்று எவரும் வழங்கார். ஆயின் மலையாளப் பழமொழிகளில் 'பூச்ச' என்னுஞ் சொல் காணப்படாமல் 'பூனை' என்னுஞ் சொல்லே வழக்குப் பெற்றுள்ளது. "அகப்பட்டால் புலி பூன" என்பது மலையாளப் பழமொழி. கல்வெட்டுக்களைப்போல் பழமொழிகளும் வரலாற் றுண்மைகளைக் காட்டவல்லன என்பது அவர்களின் கொள்கை.

பழமொழிகள் சாகா ஈவு (வரம்) பெற்றவை. உள்ளத்தைத் தொடும் கருத்தாழம் கொண்டிருப்பதால் அவற்றுக்கு அமரவாழ்வு கிட்டியது.

மலையாளப் பழமொழிகளில் அறவுரைக் கூற்றாக உள்ளவை சில. அவை :

1. "அகலவுள்ள பந்துவினைக்காள் அடுத்துள்ள சத்ரு நல்லு"
   (தொலைவிலுள்ள உறவினனைவிட அருகிலுள்ள பகைவன் நல்லவன்)

2. "அக்ருத்யம் செய்தால் அம்மயும் பிணங்கும்"
   (தீயவை செய்யின் தாயும் பிணங்குவாள்)

3. "நல்லபேரு தனத்தேக்காள் நல்லதாணு"
   (நல்லபெயர் செல்வத்தினும் சிறந்தது)

4. "பண்டுகழிஞ்சதும் படயில் சத்ததும் பறயேண்ட"
(பண்டே முடிந்ததும் படையில் இறந்ததும் பேசாதே)

நகைபாட்டாக உள்ள பழமொழிகள் சில; அவை:

1. "அகலெ போகுன்னவனெ அரிகெ விளிச்சால் அரத் துட்டு சேதம்"
(தொலைவில் செல்பவனை அருகில் அழைத்தால் அரைப் பணம் செலவாய்விடும்)

2. "அக்கன்டெ வீட்டில் உண்ணால் அரியும் கொண்டு போகணம்"
(அக்காள் வீட்டில் உணவுண்பதாயின் அரிசியும் கொண்டு செல்லவேண்டும்)

3. "அக்கரெ பச்சயெ வர்ணிக்கான் இக்கரெகார்க்கு வாக்கு போரா"
(அக்கரைப் பச்சையை வண்ணிக்க இக்கரைக்காரர் களுக்குச் சொற்கள் போதவில்லையாம்)

4. "அப்பம் தின்னணோ குழி எண்ணணோ?"
(அப்பம் தின்னச் சொன்னார்களா? துளைகளை எண்ணச் சொன்னார்களா?)

5 "அக்ரகாரத்தில் பிறந்நாலும் நாய் வேதமோதுகயில்ல"
(அக்கிரகாரத்தில் பிறந்தாலும் நாய் வேதம் ஓதாது)

அறிவுரை தழுவிய பழமொழிகள் சிலவுள. அவை:

1. "அகக்கண்ணு துறப்பிக்கான் ஆசான், பால்யத்தில் எத்தணம்"
(கல்விக்கண் திறக்க ஆசிரியர் இளமையிலேயே அமைய வேண்டும்)

2. "முற்றத்தெ முல்லய்க்கு மணமில்ல"
(முற்றத்திலுள்ள முல்லைப் பூவுக்கு மணமில்லை)

3. "அத்தாழம் உண்டால் அரக்காதம் நடக்கேணம்"
(இரவில் உணவு உண்டபின் அரைக்காதம் தொலைவு நடக்கவேண்டும். ஆங்கிலத்திலும் "After dinner sleep a while, after supper walk a mile" என்பர்.

4. "சரக்கு மிடுக்கில்லெங்கிலும் செட்டி மிடுக்கெங்கிலும் வேணம்"
(சரக்கு உயர்ந்ததாக இல்லாவிடினும் செட்டியாரின் தோரணை பெரிதாக இருக்கவேண்டும்)

5. "ஆன கொடுத்தாலும் ஆச கொடுக்கருது"
(ஒருவனுக்கு யானையே கொடுத்தாலும் 'அது தருவேன் இது தருவேன்' என ஆசை காட்டலாகாது)

6. "எல்லு முறிய பணியெடுத்தால் பல்லு முறிய தின்னும்"
(தோட்டிபோல் உழைத்து துரைபோல் சாப்பிடு)

7. "அம்போடு கொடுத்தால் அம்ருது"
(அன்போடு கொடுத்தால் அமிழ்து)

8. "ஆற்றில் தூகிலும் அளன்னு தூகணம்"
(ஆற்றில் போட்டாலும் அளந்து போடவேண்டும்)

9. "இருந்நுண்டவர் ருசியறியில் லென்னும்"
(இருந்துண்டவன் சுவையறியான்)

10. "உறவு போகாதெ கெட்டது; கடன் சோதிக்காதெ கெட்டது"
(போய்வராததால் உறவு கெட்டது; கேட்காததால் கடன் கெட்டது)

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதலைக் குறிக்க "அகத்தொண்ணு முகத்தொண்ணு" என்னும் பழமொழி மலையாளத்தில் வழங்கிவருகிறது. மெய்ப்பொருள் நாயனாரைக் கொன்ற முத்தநாதன் வரலாற்றை நினைவு கூர்வதுபோல் பின்வரும் பழமொழி மலையாள மொழியில் அமைந்துள்ளது.

"அகத்து கத்தியும் புறத்து பத்தியும்"
(உள்ளே கத்தியும் வெளியில் பக்தியும்)

இது மெய்ப்பொருள் நாயனாரின் வரலாற்றை உட்கொண்டு புனையப்பட்டதுபோல் தெரிகிறது.

''பத்திரட்டிச்ச வாணிஜ்யத்தேக்காள்
வித்திரட்டிச்ச க்ருஷி நன்னு''
(பதின்மடங்கு ஊதியம் கிடைக்கும் வாணிகத்தினும்
வித்தியது இரட்டிக்கும் வேளாண்மை நல்லது)

என்பது வேளாண்மையின் சிறப்பைக் காட்டுவதாகவும்,

''கண்ணில் குருவினு விரல் ஔஷதம்''
(கண் கொப்புளத்திற்கு விரல் மருந்து)

என்பது நாட்டுமருத்துவ முறையைக் குறிப்பதாகவும் தெரிகிறது.

ஒரு குடும்பத்தில், முதலாவது இரண்டாவது மூன்ருவது எனப் பெண்குழந்தைகள் பிறந்தால் அவர்களின் வருங்காலம் கூறும் விரிச்சி பழமொழிகள் சில மலையாளத்தில் உள்ளன.

''மூன்ருமத்தெ பெண்ணு முடி வெச்சு வாழும்''
(மூன்ருவதாகப் பிறந்த பெண் முடிசூடி வாழ்வாள்)

''நாலாமத்தெ பெண்ணு நடகல்லு பொளிக்கும்''
(நான்காம் பெண் நடைகல்லும் உடைப்பாள்)

''எட்டாமத்தெ பெண்ணு எத்தி நோக்குன்னிடம் முடியும்''
(எட்டாம் பெண் திரும்பிப் பார்க்கும் திசை பாழாய்விடும்)

''ஒன்பதாமத்தே பெண்ணு பொன் பணம் வாரும்''
(ஒன்பதாம் பெண் பொன்பணம் குவிப்பாள்)

நெருங்கிய இனத்தொடர்புள்ள மொழிகளினிடையில் உள்ள மொழியியல் தொடர்பு, பண்பாட்டுப் பிணைவு ஆகியவற்றை ஆராயப் பழமொழிகளும் பயன்படுகின்றன. பழந்தொடர்புகளை மீள நிலை நாட்டுவது, ''களவுபோய் ஆறுமாதம் கழித்து நாய் குலைத்ததாம்'' என்னும் பழமொழியை நினைவூட்டுகிறது, எனச் சிலர் நகையாடினும், உண்மைகளின் வெளிப்பாடு அத்தகையாரின் அறியாமை யிருளகற்றும் ஒளிவிளக்காய் அறிவூட்டும்.

தென்னகத்துப் பல்கலைக்கழக மொழியியல் பிரிவினர் திராவிட மொழிகளிலுள்ள பழமொழிகளை ஆராயும் பணியிலீடுபட்டால் கடந்தகாலத் தமிழ்ப் பண்பாட்டின் பழமைக் கூறுகள் பல வெளிப்படும்.

———

சிந்துவெளி மொழியும் வடமொழியும்

[புலவர் பொன். முனியப்பன், கூவலூர்.]

இன்றைய நிலையில், சிந்து வெளி மொழியும் வட மொழியாம் சமற்கிருதமும் ஏறத்தாழ 'ஒத்த சிறப்புடையவையே. சிந்துவெளி மொழிக்கில்லாத ஒரு சிறப்பு மட்டுமே சமற்கிருதத்திற்கு உண்டு. அதனை இறுதியில் காணு முன் வடமொழி இன்று வானத்தில் தூக்கி வைக்கப்பட்டிருக்கும் வரலாற்றைச் சிறிது நோக்குவோம்.

சமற்கிருதம் தேவ மொழி யென்றும், இறைவனால் படைக்கப் பட்ட மொழி என்றும் இன்னும் தம் பொய்யை இடைவிடாது கூறிவருகின்றனர். பொய்மையின் உச்சத்திற்கே சென்று இறை வனுக்கு முன்பே இம் மொழி இருக்கிறது, இது 'அநாதி' என எடுத்துரைக்கும் 'படு ஆழ' ஆய்வாளர்களும் இங்குண்டு.

தொல்லியல் ஆய்வாளர்களால் முன்பே அகழ்ந்து காணப் பட்டது சிந்துவெளி. ஆரியர் இங்கு வருமுன்னே சிறந்த நாகரிகம் பெற்றிருந்தவர் சிந்து வெளி மக்கள் என்னும் ஆய்வு மிகத் தெளிவானது.

இச் சிந்துவெளி நாகரிகம் திராவிடருடையதா? அல்லது வேறு? என்பது குறித்த ஐயப்பாடுகள் இன்று அறிவியல் முறைப்பட்ட ஆய்வின் மூலம் அகற்றப்பட்டுள்ளன[1]. தந்தை ஈராசு அடிகள் ஆய்ந்து கண்ட முடிவே சரியானது என அண்மை யில் சிறிதும் பிழைபாடற்ற அறிவியல் ஆய்வு முறையின் மூலம் நிறுவப்பட்டுள்ளது.

எனவே, சிந்து வெளிநாகரிகம் திராவிடருடையதே[2]. இச் சிந்துவெளி மக்கள் பயன்படுத்திய மொழியும் - அதற்கான எழுத்து முறையும் முத்திரைகளாக இன்று கிடைத்துள்ளன. இம் முத்திரைகளிலும் மற்றும் பல பொருள்களிலும் உள்ள

---

1. சோவியத் நாட்டின் 'இசுவெசுதா' இதழ்.

2. பேராசிரியர். நார்சோ (knorsov) வைத் தலைவராகக் கொண்ட சோவியத் மாந்த இன ஆராய்ச்சிக் கழகமும், அவரது எழுத்து மொழி ஆய்வுக் குழுவும்.

எழுத்துக்களைப் படிக்கத் தமிழ்மொழி ஒன்றே உதவுகிறது என்னும் சோவியத் நாட்டு அறிஞர்களின் கூற்றும்[3] மேற்கண்ட உண்மைக்குச் சான்றாகும்.

இஃது இவ்வாறிருக்க, ஆரியர்கள் இந்நாட்டிற்குள் வந்தது சிந்து வெளி நாகரிகத்திற்குப் பின்புதான் என்பதை அவ்வாரியரும் மறுப்பதில்லை. எனவே, ஆரியர்களுக்கு முன்பே சிந்துவெளி மொழி மிக்க சீரும் சிறப்பும் பெற்றிருந்தது. அதற்குச் சிந்து வெளியில் கிடைத்துள்ள எழுத்து முத்திரைகளும் இன்னபிறவுமே அருஞ்சான்றாகும்[4].

ஆரியர்கள் இங்கு வந்தபோது வடமொழி என்று இன்று வழங்கும் சமற்கிருதம் தோன்றவில்லை. வேதமொழி என்ற ஒன்றை அவர்கள் பேசிவந்தனர். அதற்கு எழுத்தில்லை. அக் காலத்தில் வழங்கிய 'பிராகிருதம்' என்னும் வடதமிழோடும் பிறவற்றோடும் கலந்தே இன்றைய சமற்கிருதம் உருவாக்கப் பட்டது[5].

பாணினி இலக்கணம் எழுதிய காலத்தில் சமற்கிருதம் பிறக்கவில்லை. அக்காலத்திலிருந்த பாகதமொழியை வைத்தே பாணினி இலக்கணம் படைத்தார். அவ்விலக்கணத்தைக் கொண்டு வேத மொழியைச் செப்பம் செய்து வளர்த்த செயற்கை மொழியே சமற்கிருதம்[6].

சமற்கிருதம் முற்றிலும் செயற்கைத்தன்மை உடைய தாதலால் அது என்றும் மக்கள் நாவில் வழங்கியதில்லை. சமற் கிருதத்தின் உண்மை வரலாறு இவ்வாறிருக்க, வானவியலை அடிப்படையாகக் கொண்டு வரைபடங்கள் தீட்டி, சமற்கிருதம் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது என்றும், தமிழ்

---

3. பர். குனோரா சோவு என்பாரின் தலைமையிலான சோவியத் குமுகவியல் அறிஞர்களின் குழு.

சிந்து வெளியில் கிடைத்த எல்லா முத்திரைகளும் பிறபொருள் களில் உள்ள எல்லாப் பொறிப்புகளும் முறையான அறிவியல் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு மேற்காணும் முடிவு காணப்பட்டது.

4. இது குறித்த தெளிவான யூ. என். ஐ. செய்தி 30-4-80ஆம் நாள் 'மெயில்' இதழில் மட்டுமே வந்தது.

5. 'வடதமிழ்' பேரா. இரா. மதிவாணன் அவர்களின் 'தென் மொழி' இதழ்க் கட்டுரை.

6. பன் மொழிப் புலவர். திரு. கா. அப்பாத்துரையார் அவர் களின் 'தென்மொழி' என்னும் நூல்.

எட்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியதென்றும் ஒரு புது ஆராய்ச்சி புறப்பட்டுள்ளது.

வரலாற்று உண்மைகளைக் கணிக்கும் பல்வேறு சான்றுகளில் வானவியலையும் ஒன்றாகக் கொள்வதுதான் அறிவியல் நெறியே யன்றி, வானவியல் ஒன்றைக் கொண்டே மொழி முதலான வரலாற்றை வரையும் 'மாபெரும் அரிய ஆய்வை' இதுவரை உலகம் கண்டதில்லை.

இவ்வறிஞர்தாம் முன்பு ஒருமுறை கோவைநகரில் நடந்த கூட்ட மொன்றில் திராவிடம் என்னும் சொல் எவ்வாறு வந்தது என்பதைக் கீழ்க்கண்டவாறு விளக்கினாராம்.

"இந்தியப் புவிப்படத்தைச் சுவரில் தொங்கவிடுங்கள். வடக்கே வாழ்ந்த மக்கள் ஆரியர்களால் தெற்கே துரத்தப்பட்டனர். அவர்கள் 'Through down' ஆகித் தென்பகுதியை அடைந்தனர். இவ்வாறு 'துரோ டவுன்' ஆகி இந்நாட்டில் வாழும் இனத்தார் நாளடைவில் 'துரோ டவுன் - திராடன் - திராவிடன்' என்னும் திரிபெயரைப் பெற்றனர்" என்றாராம்[7].

ஆய்வு உலகில் இதற்கு இணையான ஒரு நகைப்பை உலகம் இதுவரை கண்டிருக்க முடியாது. இத்தகைய நகைப்பு ஆய்வுகள்[8] நல்ல ஆய்வுகளாய் வேடமிட்டு நடமிடும் இந்நாட்டில் உண்மைக் கூற்றுகள் உடன் எடுபடாமல் இருக்கலாம். ஆயின், என்றும் உண்மை ஆய்வுகள் மட்டுமே நிலை பெற்றிருக்கும்.

சிந்து வெளிமொழி இன்று பேசப்படுவதில்லை. ஆயின் எழுத்துக்கள் உள்ளன. மறுப்பார் உண்டோ? சமற்கிருத மொழியும் இன்று பேசப்படுவதில்லை. ஆயின் எழுத்துக்கள், அதனாலான இலக்கியங்கள் உள்ளன. எவரும் மறுக்க மாட்டார்!

சிந்து வெளி மொழி வழங்கிய இடமும் மக்களும் புதையுண்டு போனதால் அதன் இலக்கியங்களும் நூல்களும் கிடைக்கவில்லை. சமற்கிருதத்திற்கும் அதனைக் காத்துவரும் மக்களுக்கும் அந்நிலை ஏற்படாததால் அவை இன்றும் உள்ளன.

எனவே, வரலாற்று அடிப்படையில் சிந்துவெளி மொழிக்கு எத்துணையோ நூற்றாண்டுகளுக்குப் பின்பு தோன்றியது சமற்

7. திரு. கு. வெ. கி. ஆசான் (கல்வியகம், 'அங்கும் - இங்கும்' என்னும் ஆங்கில, தமிழ் இதழ் ஆசிரியர், கோவை) அவர்கள் கூட்டத்திற்குச் சென்று நேரில் கேட்ட செய்தி இது.

8. திரு. பி. சி இராமச்சந்திரன் என்பாரின் ஆய்வுகள்.

கிருதம்.[9] இன்றைய நிலையில் சிந்து வெளி மொழிக்கு இல்லாத, பல நூல்களையுடைய ஒரு சிறப்புமட்டுமே சமற்கிருதத்திற்குரியது.

பிற நிலைகளில் சமற்கிருதமும் சிந்து வெளிமொழியும் ஒன்றே. மிகையான, அரசின் ஊட்டத்தைச் சமற்கிருதம் பெறுகிறது[10]. சிந்து வெளி மொழிக்கு அணுவளவு கூட அரசின் ஊட்டம் கிடையாது. அரசின் அரவணைப்பால் சமற்கிருதம் ஆர்ப்பரிக்கிறது. இல்லாத சிறப்புக்களையும் எடுத்துத் தலையில் வைத்துக்கொண்டு எக்காள ஆட்டமிடுகிறது.

சிந்து வெளிமொழியோ ஆர்வமிக்க வரலாற்று, மொழியியல் ஆய்வாளர்களின் அன்பையன்றி வேறெதையும் அடைவதில்லை. அதனால், அடங்கி அமைதியுற்றிருக்கிறது. வேறெந்த வேறுபாடும் இம் மொழிகளுக்கு இல்லை என்னும் உண்மையை எண்ணுங்கள்! கெடு மதி நீங்கிய, வடுவில்லாத, என்றும் நிலைக்கும் நடுநிலை ஆய்வைக் காணுங்கள்!

புதையல்

பாளையங்கோட்டை, சேவியர் பள்ளியில் வரலாறு கற்பித்த ஞானப்பிரகாசர் என்னும் பாதிரியார் வகுப்பில் எந்த மாணவனேனும் தமிழில் பேசினால் சொல்லுக்கு ஒருகாசு வீதம் தண்டனை விதித்தார். அத் தண்டனை மிகுதியாகத் தந்தவர் திரு. இரா. பி. சேதுப்பிள்ளை.

ஞானப்பிரகாசர் ஓய்வு பெற்றபின்னர் திருச்சியில் பாதிரியாராக இருந்தார். சூசையப்பர் கல்லூரி விழாவில் வீரமா முனிவரைப் பற்றி உரையாற்ற வந்த சேதுப்பிள்ளையைக் கண்டு ஞானப்பிரகாசர் உரையாடினார். "இன்று இரண்டாயிரம் சொற்களுக்குமேல் பேசுவேன்; அதற்குரிய தண்டனைப் பணத்தை முன்னரே செலுத்திவிடலாமா?" என்றார் சேதுப்பிள்ளை.

ஞானப்பிரகாசர் பழையநாள் செய்தியை நினைவு கூர்ந்து புன்முறுவலுடன், "அந்நாள் நிலை அது; இந்நாள் எங்கும் தமிழ்மணம் கமழ்கிறது; நானும் தமிழில் தானே பேசுகிறேன்" என்றார்.

—கலைமணி.

---

9. மேலும், சில சிந்து வெளிப் பகுதியில் அகழ்வாய்வு புரிந்தால் சிந்து வெளிமொழி நூல்களும் கூடக் கிடைக்கலாம்.

10. ஓரிரு ஆண்டுகளுக்கு முந்திய செந்தமிழ்ச் செல்வி இதழ்கள் காண்க.

சுந்தரத்தம்மையின் தூய வாழ்வியல்

[தவத்திரு. முருகதாச அடிகள், திருவாமாத்தூர்.]

சுந்தரத்தம்மை என்பவர் அருட்டிரு வண்ணச் சரபம் தண்ட பாணி அடிகளின் வாழ்க்கைத் துணைவியாராக வாழ்ந்தவர். பாண்டிச்சேரியில் சைவ வேளாளர் மரபினராகிய வேலாயுதம் பிள்ளை என்பவரின் மூன்றுவது மகளாகப் பிறந்தவர். இளமை யிலேயே தந்தையைப் பிரிந்ததால் தாயான திருமலையம்மையின் அரவணைப்பில் வளர்ந்தவர். கல்வி, அறிவு, ஒழுக்கம் ஆதியவை ஒருங்கமையப் பெற்றவர். இசையுடன் பாடவும், படிக்கவும் பழக்க முடையவர். சீரிய பண்புகள் ஒன்றுசேர்ந்திடத் திகழ்ந்தவர்.

1839ல் திருநெல்வேலியில் தோன்றி இளமையிலேயே வேல் வழிபாட்டில் சிறந்து, தவமும் புலமையும் தாங்கி விளங்கிய வண்ணச்சரபம் தண்டபாணி அடிகள், பலதிருவூர் வழிபாட்டைச் செய்துவரும் காலத்து, அன்பர்கள் அழைப்பிற்கிசைந்து பாண்டிச் சேரிக்கும் செல்லலாயினர். அவண் அன்று அமைச்சராக இருந்த தானப்ப ஆசாரி, கண்ணுவையர் போன்ருேர் இவர்பாலீடுபட்டு ஆதரவு தந்தனர். தங்கித் தவம்புரியத் தனியிடமமைத்துக் கொடுத் தனர். மனஒருமையுடன் வேல்வழிபாட்டைச் செய்த அடிகள் ஆங் குள்ள கடவுளர்மீது பல புகழ் நூல்கள் அருளினர். புலவர்கள், அன்பர்கள் கூடி அளவளாவினர். அறிவுரை தந்து வாழ்த்துரை நல்கினர். அவ்வாறு வந்து வணங்கியவர்களுள் திருமலையம்மை, அவர்தம் மகள் சுந்தரத்தம்மை குறிப்பிடத்தக்கவர்களாவர்.

தண்டபாணி அடிகளின் தூய நெறியும், தமிழ்ப் புலமையும், இறைப்பற்று நலமும் சுந்தரத்தம்மையின் உள்ளத்தைக் கவர்ந்தன. அடிகள் அருளிய திருப்புகழாதியவற்றைப் படித்து மகிழ விரும் பினர். அவற்றைப் பனைஒலைச் சுவடியில் எழுதி மனப்பாடம் செய்யு மாறு கூறினர் அடிகள். அவ்வாறே சுந்தரத்தம்மையும் விரை வில் மனப்பாடம் செய்து ஒப்பித்தார்.

> ''ஒருமைக்கண் தாம்கற்ற கல்வி ஒருவற்(கு)
> எழுமையும் ஏமாப் புடைத்து''

என்றவாறு இவரிடம் கல்விவளம் பெருகலாயிற்று. நாள் செல்லச் செல்லப் புதிய பாடல்கள் இயற்றும் திறனும் கைவரப் பெற்ருர். அடிகளிடம் அருளுரை பெறலானுர்.

"இப் பிறவியில் இவரை மணந்து வாழ்வேன். இன்றேல் மற்றெவரையும் மணந்து வாழமாட்டேன்" என்று கருதினர். இச்செய்தி அடிகளும் அறிந்தனர். திருவருளிடம் இந் நிலைமையை எண்ணி முறையிட்டார். முருகப்பெருமான் இவர் மனவெளியில் தோன்றி, மணந்துகொள்ளுமாறு அருளியதோடு, திருமலையம்மை கனவிலும் தோன்றி "உன்மகளை அவருக்கு மணமுடிக்க உதவுக" என அருளினர். முன்செய் ஊழ்வலியையும், முருகனருட்பாங்கையும் எண்ணி வியந்தார். தம் காலத்தில் தம் மதிப்புக்குரியவராகத் திகழ்ந்த மயிலம் சிவத்திரு சிவஞானபாலய அடிகள், வளவனூர் சண்முக அடிகள் போன்ற அருளாளர்களிடம் இச் செய்தியைக் கூறினர். அவர்களும் முருகனருளாடலை மனத்தெண்ணி ஒப்பினர். இச் செய்தியை,

> "செக்கர்நிற முருகோன்விற் சேர்பொருளே இவள்என்றுர்
> மைக்கருமா முகில்போலும் மாலும்அவள் தாய்கனவில்
> இக்கணமே இவற்கீதி! எனநீரும் பெயச்செய்தான்
> தக்கசில பெரியோரும் தடுத்துரையா திசைவுற்றுர்"

என்று அடிகள் தமது குருபரதத்துவ நூலில் குறிப்பிடுகின்றுர்.

உலகியற்படி மணவாழ்வை ஏற்கும்போது உற்றுர் உறவினர் முன், மணமகளின் கைப்பிடித்தல் உண்டு. இதனைப் பாணிக்கிரகணம் என்பர். மேலும் மங்கலநாண் இப்படித்தானிருக்க வேண்டும் என முறையின்றிப், பலர் பலவாறு உருவமமைத்தனர். மேலும் கணையாழி மாற்றிக்கொள்வது மிருந்தது. இவையனைத்தையும் விடுத்துத் தண்டபாணி அடிகள் புதிய மாற்றத்தைத் தம்மியல்புக்கேற்பக் கொள்ளலாயினர்.

முருகன் ஆணை பெற்ற அடிகள், அனைவருடனும் மயிலம் முருகன் திருக்கோயிலுக்குச் சென்றனர். 15ஆவது பட்டம் சிவத்திரு. சிவஞானபாலய அடிகள் போன்ற அருளாளர் முன்னிலையில் முருகப்பெருமானுக்குச் சிறப்பான வழிபாடுகள் செய்து, அப்பெருமான் திருமுன்பு ஆறுமுகமுள்ள உருத்திராக்கமணியை அவன் திருவடியில் வைத்திருந்ததை எடுத்துத், திருவருளை மனத்துட்கொண்டு சுந்தரத்தம்மைக்கு மங்கல நாணகச் சூட்டினர். இதனை,

> "எழில்மயிலாசலத்தேகி,
> ஆறுமுகம் தோய்தருமோர் அக்கமே மங்கலமாம்
> வீறுபெறப் புனைந்தேற்றேன்"

என்று தம் நூலிற் குறிப்பிடுகிருர். மங்கலநாண் புனேயாமல் அக்க மணியை அறுமுகன் தாளில் வைத்து மங்கல நாணுகப் புனேந்து சமய உலகில் பெரும் புரட்சி செய்துள்ளமை நினேவுகூர்தற் குரிய தாகும். எச் செயலேயும் தம் மனதில் திருவருள் விளக்கியதை அப்படியே நடத்துவர். அதனுல் வருவது புகழ்ச்சி எனினும் இகழ்ச்சியெனினும் தமக்குரியதல்ல; "எனேயசைப் பார்க்காமே" என்று தீவிரக் கருத்துடன் வாழ்ந்துகாட்டிய கொள்கை வீரர் அடிகள் என்ருல் மிகையாகாது.

சுந்தரத்தம்மையுடன் வாழ்ந்த காலத்தில் நன்மக்கட் பேற்றையும் எய்தினர். தம் மகள் ஈசுரவடிவம்மை என்பாரைத் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கோபாலசமுத்திரம் என்ற ஊரில் சைவ வேளாளர் மரபில் பெரும் புலமையும் பண்பாடுகளும் சேர்ந்து விளங்கிய சண்முகதாசபிள்ளே அவர்கட்கு வாழ்க்கைத் துணேவி யாக்கினர்.

தம் மைந்தர் செந்திநுயக அடிகட்குத் திருநெல்வேலியை யடுத்த பாளேயங்கோட்டையில் வாழ்ந்த, சிவராமபிள்ளே அருமை மகள் தங்கத்தம்மையை மணமுடித்தனர். அடிகள், தம் நூல் களிலும், பிற இலக்கியங்களிலும் பாடங் கூறிப் புலமைப் பண்பைச் சுந்தரத்தம்மையிடம் உண்டாக்கிய முறைமை பெருமைக் குரிய தாகும். ஆண்டுகள் சிலவாகியபின் திருப்போரூர் சிதம்பர அடிகள் "இல்லறத்தா னல்லேன் இயற்கைத் துறவியல்லேன்," என்றருளியவாறு அடிகள் இரண்டறத்திலும் இணேந்து வாழ்வ தானுர். தாமரையிலேத் தண்ணீர் போலவும், புளியம்பழத்தின் ஓட்டைப்போலவும் வாழ்வர் ஞானிகள் என்பர். அதுபோல இவருடைய வாழ்வியலும் அமையத் தொடங்கியது.

அவ்வாருன நாளில் சுந்தரத்தம்மையை நோக்கி இதுவரை வாழ்ந்த புலவர்கள், துறவிகள், தாமியற்றிய நூல்களில் மகளிரை இழித்தே கூறினர். புலமையும், பாடலியற்றும் பண்பும் கெழுமிய நீ, பெண்களேச் சிறப்பித்து ஒரு நூலியற்றுக! என அருளிய வண்ணச் சரபம் தண்டபாணி அடிகள்,

"திருவருளாம் சக்திகொண்டே தெய்வமெனும் ஒன்றும்
சருவசித்தும் செய்தல் சரதம்"

என முதற்கண்ணி எடுத்துக் கொடுத்துப் பாடச்செய்தார். அதைத் தொடர்ந்து கலிவெண்பா யாப்பில் 'பெண்மாட்சி' என்ற நூலியற்றி யுள்ளார் சுந்தரத்தம்மையார். நூலின் சிறப்பைப் பாராட்டிய அடிகள்,

"மலைமீ திருந்துருண்டும் வாழஎன்னைக் காத்தாண்(டு)
இலைவேற்கைச் சண்முகவேள் ஈந்த—கலைமானேர்
சுந்தரப்பேர்த் தோகை துணிந்துரைத்த பெண்மாட்சி
அந்தரத்தோர் ஆரமுதொப் பாம்"

என்று குறிப்பிடுகிறார்கள். சுந்தரத்தம்மை தமது பெண்மாட்சி நூலின் ஒருபகுதியில்,

"... ... ...
அறிவின் சிறப்படைந்த ஆன்ஞானிகளிற்
பொறியடக்க முற்றசிலர் போன்றோர்—வெறிகமழும்
வேயாம்மென் றோள்படைத்த மெல்லியர்எல் லார்களையும்
தாயா நினைத்தே தவமுடித்தார்—வாயார
நிந்தித்து வாழவில்லை; நீடுகருப் புச்சிலையாற்
பந்திக்கப் பட்டசில பாவலரே—அந்திபகல்
மின்னார்போல் லாரெனவே வீணாய்ப் பழித்துரைத்தார்
... ..."

என்று திறமுறக் கூறியிருப்பது வியத்தற்குரியதாகும். இதனை யறிந்துதான், தமது பாராட்டுக் கவியில் "துணிந்துரைத்த பெண் மாட்சி" என்று தண்டபாணி அடிகள் கூறினர் போலும் என எண்ணவுள்ளது. இவ்வாறு அடிகளை ஆசிரியராக—குருவாக—கணவராக அம்மையார் பெற்றுவப்புற்றது பெருமைக் குரிய தாகும்; தமிழ்நாட்டிற்குப் புதுமையுமாகும்.

நெல்லையில் தங்கிய அடிகள் திருக்கோயில் வழிபாட்டை மேற் கொண்டு, இறுதியில் நடுநாட்டுச் சிவப்பதியான திருவாமாத்தூரில் தங்கினர். எல்லைதாண்டா நோன்பு மேற்கொண்டார். தவநெறி நின்றார். அளப்பரிய அருந்தமிழ் நூல்களருளி 1898 விளம்பி ஆண்டு, ஆனித் திங்கள் திருவோண நட்சத்திரத்தன்று முருகப் பெருமான் திருவருளிற் கலந்தருளினர். அவரது ஞான சமாதி மேல் பழனியாண்டவர் திருவுருவம் அமைத்து நாடோறும் அவர்தம் மரபினரால் வழிபடப் பெறுகிறது. அடிகள் அருளியும் எழுதியும் வைத்த பனையோலைச் சுவடிகள் யாவும் அவர்கள் பாதுகாப்பில் உள்ளன என்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

அடிகளிடம் உபதேசம் பெற்றவர்களுள் ஒருவராகிய சிரவணபுரம், கௌமாரமடாலய ஆதிகுருமுதல்வர், அருட்டிரு—இராமானந்த அடிகள், தம் குருபத்தினியாரான இவ்வம்மை யாரைக் கண்டு வணங்கவரும் சமயம் ஒரு தட்டில் மலரும், தூப தீபமும், கொண்டுவந்து தூரவே நின்று, மலர்தூவி, கற்பூரச் சுடர் காட்டி வணங்குவது வழக்கம்.

''ஆசான் மனையைஅடி தீண்டா தருச்சிக்க
வாசார் மலரால் மதித்து''

என்ற சைவசமய நெறியின் விளக்கத்தில் குறிப்பிடுவதற்கு இலக்கியமாக அமைந்த செயல் குறிப்பிடத்தக்கதாகும்.

அடிகளோடு வாழ்ந்த காலத்தில், அவர்கள் முன்னிருந்து அம்மையார் பாரதம் போன்ற நூல்களைப் படிக்க, அடிகள் விளக்கம் கூற, அன்பர்கள் பலரும் கேட்டுவப்புறுவது வழக்கம். இத்தகைய நாளொன்றில் சுந்தரத்தம்மைக்கு அடிகள் துவராடை நல்கினர். அதைப் பிரசாதமாக ஏற்றுப் பாதுகாப்பில் வைத்திருந்தனர். தம் இறுதிக் காலத்தில் அதை அணியவேண்டும் என்று கருத்துட் கொண்டனர். சிலகாலத்தில் வண்ணச் சரபம் தண்டபாணி அடிகள் திருவருட் பேறெய்தினர். அம்மையாரும் உயிர் துறக்க முனைந்தனர். உடனிருந்த அன்பர் பலரும் "அடிகள் பிரிவையே தாங்கமுடியாதிருக்கின்றோம், தாங்கள் உயிர் நீப்பின் எங்கட்கு வேறு துணையாவார் யார்? குமரராகிய செந்திநாயகரும் பதினான்கு வயதினராயிற்றே'' என்றெல்லாம் கூறி வேண்டினர். அது கேட்ட அம்மையார் வருங்கால நிலையை எண்ணி ஆறுதலடைந்தனர். திலகவதியார், "தம்பியார் உளராதல் வேண்டும்'' என்றும், "அம்பொன்மணி நூல் தாங்காது அனைத்துயிர்க்கும் அருள்தாங்கி'' என்றும் கருதிய கருத்துகள் ஈண்டு நினைவு கூரத்தக்கனவாகும். அடிகள் மறைவுக்குப்பின் மடத்தின் எல்லை தாண்டா நோன்பு மேற்கொண்டனர். தம் மைந்தர் செந்திநாயகருக்கு அறிவும், புலமையும், உண்டாக்க நூல்களிற் பயிற்சி தந்தார். தம் குருநாதர் நூல்களைப் படிக்கச்செய்து மகிழ்ந்தார். விளக்கங்கள் கூறுவார். முக்கிய பல பேரன்பர்கள் துணைகொண்டு மடாலய வளர்ச்சிக்கு வேண்டிய பல பணிகளை ஊக்கமுடன் செய்தார். பல நிலையிலும் ஊன்றுகோலாய் நின்ற அம்மையார், தம் எழுபத்திரண்டாவது வயதில் கடந்த விபவ ஆண்டில் திருவருட் பேறுற்றார். அவர் தம் விருப்பப்படியே தண்டபாணி அடிகளிடம் பெற்றுவைத்திருந்த துவராடையை அணிவித்து அவரது திருவுடல் அடக்கம் செய்யப்பெற்றது.

அவர்தம் சிறப்புகளனைத்தையும் பரிபூரணப் பாக்கள் மூலம் பலரும் பாராட்டிப் பாடினர். அவைகளுள் சிரவணபுரம் கௌமார மடாலய இரண்டாவது பட்டம், தவத்திரு. கந்தசாமி அடிகள் பாடற்கருத்துகள் நெஞ்சை நெகிழ்விக்கும் தரத்தினவாகும்.

''ஆண்பிறவி தானும் அறிவில்லார் கொண்டனரேல்
வீண்பிறவி சின்னனையார் மேவுகினும் பெண்பிறவி

மாண்பிறவி என்ன மதித்துணர்ந்தோர் வாய்பகர்சொற்
றேண்பிறவி கொண்டருளும் சுந்தரப்பே ரம்பிகையே"

என்பதால் அறியலாம். இப்படிப் பலவாகும்.

தண்டபாணி அடிகள் திருவருட் கலப்பெய்தியபின், துறவு நெறி நின்று துவராடை அணியலாயினர். இறுதிக் காலம்வரை குருநாதர் சந்நிதிக்கு வந்து வழிபடுவதை வழக்கமாகக் கொண் டிருந்தனர். இன்று என்போன்றவர்கள், இளம்வயதினராக இருந்தகாலத்தில் அடிகள் அருளிய வண்ணப் பாடல்கள், திருப் புகழ்ப் பாக்கள் ஆதியவற்றைத் தம் நினைவாற்றலாலும், ஏட்டுச் சுவடியைப் பார்த்தும் பாடல்கள் எழுதச்செய்தும், இவ்வாறுதான் படிக்கவேண்டும் என எடுப்பான குரலில் பாடிக்காட்டியும் ஆர்வ மூட்டிய செயல்கள் மறக்கத்தக்கவையல்ல.

இறுதிக்காலத்தில் உடல் தளர்வுற்றபோதும் அடிகள் பாடல்களையும், செய்திகளையும் வரும் அன்பர்கட்கு ஆர்வமுடன் கூறுவர். அம்மையார் படும் துயரம் கண்டு பேசவேண்டாம் என் றாலும், என்நோய்க்கு இப்படிப் பாடுவதும் பேசுவதும்தான் மருந் தாகவும், இதமாகவும் உள்ளதென்று கெம்பீரமாகப் பாடும் செயல் இன்னும் என் மனத்தில் பசுமையாகவே யுள்ளது. இவரது இத் தகைய செயல் கண்டு பலரும் பாராட்டி மகிழ்வர். என்னைத் தம் மகன் செந்திநாயகரின் மகன் என்னும் பெயரன் உரிமையால் மட்டுமன்றி, மடாலயத்துக்கு மிக நெருக்கமுள்ள அன்பர்களின் பிள்ளைகளாகிய திருவாமாத்தூர் திரு. தி. கு. இராமசாமி முதலியார் போன்ற இளையவர்களையும் அரவணைத்து வேறுபாடின்றி என்னைப் போலவே கருதிப் பாராட்டி, ஈடுபடுத்திப் பாடம் எழுதிப் படிப்பித்த நன்றியுணர்வை இன்றும் பாராட்டி மகிழ்வதைக் காணலாம்.

சிரவணபுரம் கௌமாரமடாலய ஆதி முதல்வர் அருட்டிரு. இராமானந்த அடிகள் அருளிய நூல்கள், அவர் மாணவர் தவத்திரு. கந்தசாமி அடிகள் அருளிய நூல்கள், தம் மைந்தர் தவத்திரு செந்திநாயக அடிகள் அருளிய நூல்கள் ஆகியவை கட்கு வாழ்த்துப் பாடல்கள் பாராட்டித் தந்தனர். மேலும் திருவாமாத்தூர் அபிராமேசுவரப்பெருமான், முத்தாம்பிகை, முருகன் போன்ற கடவுளர்கட்குப் புகழ் நூல்கள் பல அருளி யுள்ளனர்.

ஒருசமயம் திருவாமாத்தூரின் மடாலயத்துக்குரிய நிலங்கள் நடவுசெய்ய ஏற்பாடாகி யிருந்தது. மேகம் திரண்டு இடி இடித்து

மழை பெய்ய இருந்தது. நடவு வேலையைக் கெடுத்துவிடும் போலிருந்தது. அன்பர்கள் விருப்பையறிந்த அம்மையார்,

''மோதகமும் தேங்காயும் மொக்குதற்கு நான்படைப்பேன்
ஏதமிலா தின்றே எழில்நடவு செயச்செய்வாய்
தீதனைத்தும் தீர்க்கும் திருவாமாத் தூர்மடத்திற்
கோதகற்றும் *கெம்பீரக் குஞ்சரப்பேர் கொண்டோயே''

என்று பாடலால் வேண்டினர். நடவு நலமாக நிகழ்ந்தது. அன்பர்கள் பாராட்டி மகிழ்வெய்தினர். பின்பொரு தடவை மழையின்மையால் மக்கள் வாடியது கண்டு மழை பெய்யுமாறு திருவருளிடம் முறையிட்டுப் பெற்றதும் ஈண்டு நினைவு கூர்தற்குரியதாகும்.

அடிகளின் மாணவர்களுள் ஒருவரான அரன்வாயில் தங்கவேலுப் பிள்ளை என்பார் உடல்நலங் குன்றியிருந்தபோது தம் குருபத்தினியாரிடமிருந்து திருநீறு பெற்றணிய விரும்பித் தம் கருத்தை,

''வற்றாத பேரருட் சுந்தரத் தாயின் மலரடிக்குக்
குற்றேவ லுஞ்செய்து கும்பிட் டிறைஞ்சிக் குரவனருள்
பெற்றே எழுகின்ற பேறுமுண் டோஇப் பிறப்பிலினி
அற்றே ஒழிந்தது வோஎன்று நெஞ்சமிக் கையுற்றதே''

என்ற பாடல் எழுதி அஞ்சலில் அனுப்பினர். சுந்தரத்தம்மையார் அன்பர் விரும்பியவாறு வாழ்த்தித் திருநீறனுப்பினர். அணிந்து மகிழ்ந்த அவ்வன்பரும் உடல்நலம் பெற்றனர். அன்பர்களை வரவேற்பதிலும், அட்டிற்பணியில் ஆர்வங்கொண்டு சுவைமிகுமாறு செய்வதிலும் வல்லவராயிருந்தனர்.

இவ்வாறு பல்லாற்றானும் சிறப்புற்று விளங்கிய சுந்தரத் தம்மையார் வாழ்த்தும், நல்லுள்ளமும், தண்டபாணி அடிகள் தோன்றாத் துணையும் எங்களுடைய வாழ்வை வளமாக்கி வருவது உள்ளங்கை நெல்லிக் கனியென்பது உண்மையாகும்.

———

குறிப்பு: *கெம்பீர விநாயகர் என்று தண்டபாணி யடிகளாற் பெயர் சூட்டி வழிபாடுசெய்யப்பெற்ற மூர்த்தி; இன்றும் திருவாமாத் தூர் கௌமாரமடாலயத்தில் உள்ளது.

தனிவழிக்குத் துணை

[வி. இலட்சுமி நாராயணன், சென்னை.]

துணை ஏதும் இல்லாத வழியைத் தனிவழி என்று கூறுவார்கள். சிறுவர்களைப் பெரியவர்கள் "தனியாகச் செல்லாதே; யாராவது துணையோடு செல்" எனக் கூறிப் பள்ளிக்கு அனுப்புவர். செயல் முறையில் ஒருவர் தனிப்பட்ட வழியைக் கையாண்டால் "அவன் வழியே தனியப்பா!" எனச் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஒரூரிலிருந்து மற்றோர் ஊருக்குச் செல்ல, பலவழிகள் இருத்தல் கூடும். இருப்பினும் பெரும்பாலோர் பயன் படுத்தாத ஒரு வழியை ஒருவருக்குக் கூறுமிடத்து, "இவ் வழியில் அதிக மக்கள் நடமாடு வதில்லை; ஆகவே எச்சரிக்கையாகச் செல்லுதல் வேண்டும்" என்று அறிவுறுத்துவார்கள். ஒரு தனிவழியில் செல்லும்போது அச்சம், ஏற்படும். ஆகவே எச்சரிக்கையாக இருத்தல் கட்டாயம். அதிகமான அச்சத்துடன் கூடிய தனிவழி ஒன்று உண்டு. அதுவே உயிர் உடலை விட்டுப் பிரிந்து போகக் கூடிய தனிவழி. இந்தத் தனிவழியில் செல்லவேண்டிய கட்டாயம் எல்லா உயிர் களுக்கும் ஏற்படும். சிறிய உயிர்களுக்கு இத் தனிவழியைப் பற்றி அறிவு இருப்பதில்லை யாயினும், அச்சம் இருப்பது கண்கூடு.

பகுத்தறிவு படைத்த மனிதர்களுக்கு இத் தனிவழியைப் பற்றி அறிவு உண்டு. நம் முன்னோர்களும், அருளாளர்களும், ஞானவான்களான ஆசிரியர்களும் இதைப்பற்றிப் பலவாறாக எடுத்துக்கூறி, அதற்காகச் செய்யவேண்டிய முன்எச்சரிக்கைகள் யாவை என்பது பற்றியும் விரிவாக எடுத்துக் கூறி இருக்கின்றனர்.

... ... "இடாமல் வைத்த
வங்காரமும் சிங்காரவீடும் மடந்தையரும்
சங்காதமோ உயிர் போம் அத் தனி வழிக்கே!"

—கந்தரலங்காரம்

நாம் உயிரோடு வாழும் காலத்தில் சேர்த்து வைத்த சொத்தும், பணமும் எல்லாம் உயிர் போகும் அத் தனிவழிக்கு உதவாது.

உயிர்போய்விட்டது என்பதை உயிர் விட்டவன் அறியான். ஆயினும் அருகில் உள்ள மற்றவர் அறிகின்றனர். அவர்களும் எவ்வழி போயிற்றென்பதை அறியார். உயிர் உடலை விட்டு அகலும் பொழுது அந்த உடலிலிருந்து எந்த ஓர் அணி

கலனையோ, பொருளையோ எடுத்துச் செல்வதில்லை. அந்த உடலில், பின்பு அசைவு (சேதனம்) இருப்பதில்லை. உயிரற்ற அவ்வுடல் பிணம் எனும் பொதுப் பெயர் பெறுகிறது. உயிர் தனிவழியே சென்று விடுகிறது.

''ஊரெல்லாம் கூடி வொலிக்க அழுதிட்டு,
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டு'' —திருமந்திரம்

''பத்தும் புகுந்து வளர்ந்து பட்டாடை சுற்றி
முத்தும் பவளமும் பூண்டோடி ஆடிமுடிந்தபின்பு
செத்துக் கிடக்கும் பிணம்.'' —பட்டினத்தடிகள்

இவ்வாறு உயிர் பிரிந்த பின்பு, பிணமாகிய உடலைச் சுடுகாட்டில் கொண்டுபோய் எரிக்கும் பொழுது கட்டையோடு கட்டையாக வேறுபாடு இன்றி எரிகிறது. இதுபற்றி ஞானமிருதாசிரியரான திரு வாகீச மாமுநிவர் கூறுவது சிந்திக்கற்பாலது.

''அங்கத்தி யாவு மழியா திங்குயிர்
விட்ட தென்று சட்டகம் புகழாக்
கட்டி லேற்றி கைதொழூஉப் பரவி
யிட்டிடை மகளி ரெருக்கச் சட்டென
அழல்வாய் பல்பிண மருந்தீ மத்து
முருட்ட ணைப் பாயற் குரூஉப் புகைமிளிரப்
பாவகற் றழீஇக் கொன்ன வேஎம்
இந்தனத் தியற்கை யாக்கை யென்றினி
விழித்தனை காணிலை தொழிப்பரும் பெரும்பொறை
யெரிவிருந் தாய வீங்கு நீண்ட
வரிதரு கண்ணியர் மதனனென் றுங்கும்
வேற்றுமை யுளதேற் சாற்றுக'' —ஞானமிருதம் 6

[பொருள்: அவயவங்களிலே ஒன்றும் குறைவின்றி இருக்கவே, இப்பொழுது உயிர் போயிற்றென்று சவத்தைப் புகழ்ச்சியில்லாத பாடையிலே யிட்டு, நுண்ணிய இடையையுடைய மாதர்கள், கையாலே தொழுது, துதித்து, மார்பிலும் தலையிலும் மோத, அதனை விரைவாகக் கொண்டுபோய், நெருப்பை வாயாகக் கொண்டு பல பிணங்களைப் புசிக்கின்ற சுடலையிலே, முருட்டு விறகுகளைப் படுக்கையாக அடுக்கி, (அதிற் கிடத்த) ஒளியையும் புகையையுமுடைய அந் நெருப்புடனே பரிசித்துக்கொண்டு, வேறுபாடற வேகும் விறகின் தன்மை இவ் வுடல் என்று இனி ஞானதிட்டியை விழித்துப் பாராய். இந்த ஒழித்தற்கரிய உடலாகிய பெருஞ்சுமையை நெருப்புக்கு விருந்தாக்கிய இப்பொழுதும்,

காதளவு நீண்ட செவ்வரி, கருவரி படர்ந்த கண்ணையுடைய மாதர்களெல்லாம் காமதேவன் என்ற அப்பொழுதும் வேறு பாடுண்டாயிற் சொல்லுக : "ஞானமிருத" நூல் உரை ஸ்ரீ சுப்ரமண்ய கவிராயர் 1904.]

கண்களுக்குப் புலப்படாத உயிர் இந்த உடலுக்கு உயர் பதவியைத் தருகிறது. உயிர் தனிவழி சென்றபின் உடல் அடைந்த சிறுமையைப் பார்த்தோம்.

பிறந்தநாள் தொட்டு இறப்புவரை உடலுடன் கூடியிருந்த உயிர் தனிவழியில் செல்லும் சமயம், அதற்கு, என்ன துணை? அந்த உயிர் பயம் ஏதுமின்றிச் செல்ல அத் தனிவழிக்குத் துணை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியம் தானே? அந்த உயிர்க்குத் துணை இறைவனே என உறுதியாகச் சொல்லுகிறது சைவ சிந்தாந்தம். இறைவனைத் தவிர வேறு எந்தத் துணையும் உயிருடன் கூடச் செல்ல அருகதையற்றதாகி விடுகிறது. தந்தை, தாய், தாரம், மக்கள் என்பவரெல்லாம் கூட வாரார்.

"மனைவிதாய் தந்தை மக்கள் மற்றுள சுற்றமென்னும்
வினையுளே கிடந்தழுந்தி வேதனைக்கிட மாகாதே"
—திருநாவுக்கரசு நாயனர்

"இறுதியொடு அறுதியென உறவின்முறை
கதறியழ." —திருப்புகழ்

இறைவனை எக்காலமும் நினைந்து, எல்லா உயிரும் ஒரே கடவுள் தத்துவத்தின் (பகுதியாக) அம்சமாகக் கருதி எந்த ஓர் உயிர்க்கும் ஊறு செய்யாமல் வாழ்தல் வேண்டும் என வலியுறுத்தினர் வள்ளலார். இதையே கொல்லாமை நோன்பாகக் கொண்டனர் வள்ளலார். உயிருடன் உள்ள உயிரிகளிடம் மட்டுமன்றி, ஓரறிவு படைத்த செடி கொடி மரங்களில் கூட இறைவனைக் கண்டனர் தாயுமான அடிகள். ஓர் உயிரைக் கொல்லப்போகும் போது கண்டு அஞ்சியதோடு, அவ்வுயிர் பதைக்கும் பொழுது தாமும் பதைத்ததாகக் கூறினர் வள்ளலார்.

"பார்க்கின்ற மலரூடு நீயே யிருத்தி அப்
பனிமலர் எடுக்க மனமும் நண்ணேன்." —தாயுமானவர்

"துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத்
தொடங்கிய போதெல் லாம் பயந்தேன்
கண்ணினல் ஐயோ! பிற வுயிர் பதைக்கக்
கண்ட காலத்திலும் பதைத்தேன்." —வள்ளலார்

"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
வாடினேன்." —வள்ளலார்

இம் மேலோர்களுடைய உள்ளப்பாங்கும், அருள்நோக்கும் நம்மை மயிர்க் கூச்செறியச் செய்கின்றன. கொன்று தின்னும், புலால் உண்ணும் பழக்கத்தை அறவே வெறுத்தார்கள் தாயுமானவரும், வள்ளலாரும்.

"கொல்லா விரதமொன்று கொண்டவரே, நல்லோர் மற்று
அல்லாதார் யாரோ அறியேன், பராபரமே." —தாயுமான அடிகள்

பிறவுயிர்கள் பசியினால் வாடும்பொழுது, அவற்றுக்கு உணவு கொடுத்து ஆதரித்து அறம் செய்தல் நம் உயிர்க்குத் துணையாக அமையும். பிறவுயிர்களுடைய துன்பத்தைத் தமக்கேற்பட்டதாகக் கருதுவதுதான் அறிவினால் ஆய பயன் என்பார் திருவள்ளுவர். நாம் பெற்ற செல்வம் இறைவன் தந்ததென்று கருதி, ஏழை எளியமக்களுக்குத் தருதல் வேண்டும்.

"பிறக்கும் பொழுது கொடுவந்ததில்லை, பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவதில்லை, இடைநடுவில்
குறிக்குமிச் செல்வம் சிவன் தந்ததென்று கொடுக்கறியாது
இறக்குங் குலாமருக்கு என்சொல்லுவேன், கச்சி
ஏகம்பனே!" —பட்டினத்தார்

"வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை." —திருவள்ளுவர்

இறைவன் மேல் அன்பு கொண்டு வாழ்க்கை நடத்துவதே, நம் உயிர்க்குத் துணையாகப் "பயந்த அத்தனிவழிக்கு" அமையும் என்பது மேலோர்களின் கோட்பாடு. மனம், வாக்கு, காயம் ஆக மூன்றும் ஒன்றிய நிலையில் இறைவனைத் துதித்தல் வேண்டும் எனப் போதிக்கிறார் மாணிக்கவாசக அடிகள்.

"என்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி
அன்பெனும் ஆறு கரையது புரள
நன்புலன் ஒன்றி நாதஎன் றரற்றி
உரைதடு மாறி உரோமம் சிலிர்ப்ப
கரமலர் மொட்டித்து இருதயம் மலரக்
கண்களி கூர நுண் துளி அரும்பச்
சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்." —மாணிக்கவாசகர்

மேற்கூறிய பரவசநிலையில் உடலில் ஒவ்வோர் உறுப்பும் இறை உணர்வுடன் அன்பு மீக்கூர்ந்து ஒரே முகமாக வழிபடுவதாயின்

இறைவன் உயிர்த்துணையாக இருப்பான். உயிர், பயந்த அத் தனி வழிச் செல்லும் சமயம் இறைவன் அவ் வுயிர்க்குத் துணையாக வரவேண்டுமாயின், மேற்கூறிய எச்சரிக்கைகளை நாம் உயிர் வாழும் காலத்திலேயே கடைப்பிடித்து ஆயத்த நிலையில் வைத்துக் கொள்ளுதல் இன்றியமையாததாகும். நம் வாழ்நாள் முழுவதையும், பணமும், பதவியும், மாடும் மனையும், வீடும் செல்வமும் சேர்ப்பதிலேயே செலவிட்டு, வாழ்ந்தால் அப்படிச் சேர்த்த ஒரு பொருள்கூட நம் உயிர்த்துணையாக வாரா. அவை நம் உயிர்போம்பொழுது உடன் வரவில்லையானால், அவற்றால் நமக்கு மேன்மை இல்லைதானே? நமக்கு எவை துணையாக வரும் என்பதை அருணகிரிநாதர் வாக்குகள் தெள்ளத் தெளிவாக விளக்குகின்றன.

> "விழிக்குத் துணை திருமென்மலர்ப் பாதங்கள், மெய்ம்மை குன்றா
> மொழிக்குத் துணைமுரு காஎனும் நாமங்கள், முன்புசெய்த
> பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும், பயந்ததனி
> வழிக்குத் துணைவடி வேலும்செங் கோடன் மயூரமுமே."
>
> —கந்தரலங்காரம்

இவ்வாற்றான் பெறப்படுவது யாதெனில் :

இந்த உடல் உயிருடன் இருப்பினும் பின்பு துணையில்லாமல் ஒருநாள் இந்த உயிர் உடலை விட்டுப்போகும் என்பதையும், பயந்த அத் தனிவழிக்குத் துணை எது என்பதையும் கருதி இருத்தல் வேண்டும். மற்ற வுயிரிகளையும், தம்முயிர் போலே கருதி அவற்றிற்கு எந்தவித ஊறும் செய்யாது இருத்தல் வேண்டும். கொல்லாமை என்னும் நோன்பு பூண்டு ஒழுகுதல் மிகமிக இன்றியமையாதது. ஏழை எளியவர்கள், பசியுற்று வாடும்பொழுது அவர்தம் நிலைக்கு இரங்கி, இறை நினைவுடன் நம்மால் இயன்ற அளவு அவர்களுக்கு உணவு, பொருள் முதலிய கொடுத்து அவர்கள் துன்பத்தைத் தவிர்த்தல், இறைவனைத் துதித்தற்கு ஒப்பதாக அமையும். எந்நேரமும் இறைவனை நினைந்து, "எங்கெங்கு பார்க்கினும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய் அங்கங்கிருப்பது, நீயன்றோ" என்ற தாயுமான அடிகளின் நன்மொழிகளை நினைந்து வாழவேண்டும். எல்லா உயிர்களிலும் இறைவனது உருவைக் கண்டு அன்பு பாராட்டி, இடுக்கண் களைந்து, தன் நலம் கருதாது, பிறர்க்கென வாழ்தலோடு, நம் உயிர் போகும் அத் தனிவழிக்குத் தவறாத துணை எது எனத் தேடி வாழ்தல் வேண்டும்.

———

கூடும் குடும்பமும்

[செல்வக் கண்ணன்]

குத்துக்கல் மேலே குருவிகள் இரண்டு
குந்தி இருந்தன ;
குருவிகள் இரண்டும் கூடு கட்டக்
கூடிப் பேசின ;
புளிய மரத்தில் புதிய கூட்டைப்
புனைய விழைந்தது ஆண் ;
தென்னை மரத்தில் தேர்ந்து கூட்டைக்
கட்டத் திரிந்தது பெண் ;
புளியின் வலிமையைப் புகன்றது ஆண் ;
தென்னையின் சிறப்பைத் தெளித்தது பெண் ;
ஆணும் பெண்ணும் இசைந்தால் அன்றோ குடும்பம் ?
அசைந்து போனல் குடும்பம் ஆவதும் எப்படி ?
ஆணின் உரையை அறவே மறுத்தது பெண் ;
உண்மை உரை ஒருநாள் வருமென அமைந்தது ஆண் ;
தென்னை மரத்தில் கூடு கட்டத்
தேடி இரண்டும் விரைந்தன ;
கூடும் எழுந்தது ; குடியும் புகுந்தன ;
தென்றல் காற்றில் மெல்லென அசைந்தது கூடு ;
தேனிசை பாடி ஊஞ்சல் ஆடின இரண்டும் ;
"புளிய மரத்தில் தென்னை போலப்
பொலிவும் அசைவும் உண்டோ ?" என்றது பெண்.
'அப்படியா ?' என்று அமைந்தது ஆண் ;
காலம் கடந்து கடிதில் பறந்தது,
புதிது புதிதாய்த் தென்னையில் குருத்துக் கிளர்ந்தன,
பழைய கீற்றுகள் பழுத்து முதிர்ந்தன ;
முற்றிக் காய்ந்து வற்றிப் போயது அடியில் இருந்த கீற்று,
அந்தக் கீற்றும் ஆடிக் காற்றில்
அடியும் முடியும் ஆடி அலறி வீழ்ந்தது ;
கூடு பிழைக்குமோ ? குடும்பம் தழைக்குமோ ?
நாணி ஒடுங்கி நலிவு கூர்ந்தது பெண் !
பிழையை மறந்து பெரிய அன்பைப்
பேணிப் பொழிந்தது ஆண் !
புதிய அறிவு ! புதிய வாழ்வு !
புதிய பாட்டுப் பூரிப்போ டெழுந்தது !
கூடு பிரிந்தால் என்ன ! — எங்கள்
குடும்பம் பிரியவில்லை.
குடிசை அழிந்தால் என்ன ? — எங்கள்
குடும்பம் அழிய வில்லை !
ஒத்துப் போகத் தெரிந்தோம் — நாங்கள்
ஒழிந்து போக வில்லை.
முத்துப் போலத் தெரிந்தோம் — அதனை
முழுதும் ஏற்றுக் கொண்டோம் !

மொழிநலம் பேணல்

[நக்கீரன் வழியடிமை. புலவர். பி. மா. சோமசுந்தரனர்,
இராணிப்பேட்டை.]

1. முன்னுரை

செந்தமிழ்ச்செல்வி, சிலம்பு 54, பரல் 10இல் தமிழ்ச் சிதைப்பு வெறியர்கள் என்ற கட்டுரையின் ஆசிரியர் இருபதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் தமிழர் மீளவும் துயிலில் ஆழத் தொடங்கியுள்ளதைச் சுட்டாமல் சுட்டுகின்றுர். அடியவனது 'திகடசக்கரம்' என்ற கட்டுரையையும் இதழாசிரியர் குறிப்புரையையும் எடுத்துக்காட்டிய அவர் புதுவதாக ஒரு நிகழ்ச்சியையும் குறித்திருப்பின் பயன் விளையக்கூடும். தமிழர் என்ற உணர்ச்சியுடைய ஒவ்வொருவரும் மொழிகாக்கும் கட்டாயத்தை உணர்வர். மேலும்,

> "வாள்போல் பகைவரை யஞ்சற்க யஞ்சுக
> கேள்போல் பகைவர் தொடர்பு"

எனவரும் பொய்யா மொழியையும், அதனை "முன்னே அறிந்து காக்கப்படுதலான் அஞ்சற்க என்றும் அங்ஙனம் அறியவும் காக்கவும் படாமையின் கெடுதல் ஒருதலை என்பது பற்றி அஞ்சுக என்றும் கூறினர்" என விளக்கும் பரிமேலழகர் உரையையும் நன்கு உளத்தமைத்து விழிப்புடனும் இருப்பர். இக் கருத்தே இக் கட்டுரையின் தோற்றுவாய் ஆகும்.

2. பாம்பன் அடிகளார்

முருகன் அருட்கடலில் மூழ்கித் திளைத்தவர் பாம்பன் குமர குருதாச அடிகளார். சைவத்துக்கும் செந்தமிழுக்கும் இவர் ஆற்றிய தொண்டு அளவிடற்கரியது. 'இவர்க்கு மிகவும் கடமைப்பட்ட சைவ வுலகம் இவரைத் தக்க அளவு போற்ருதிருந்தமை தவக்குறைவே' என்று திரு. கா சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ., எம்.எல் அவர்கள் இலக்கிய வரலாறு என்ற நூலில் கூறியுள்ளது உளங்கொளற் பாற்று.

இவர்தம் திருக்கோயில் திருவான்மியூரில் உள்ளது. வழிபாடு கருதிவரும் மக்கள் தொகை பெருகி வருகின்றது.

3. வடமொழி பேணல்

இத்தகைய வாய்ப்பை நழுவவிடாது தம்மையும் தம் மொழியையும் வளர்த்துக் கொள்ளச் சிலர் முயல்கின்றனர் போலும்.

ஓர் இதழ் வெளியாகி உள்ளது. அதன் இரண்டாம் பக்கத்தில் உள்ளவற்ருல் அது திங்கள் இதழ் எனப் புலனுகின்றது.

திருக்கோயில் வெளியீடு அன்று என்பதும் உணர முடிகின்றது. இதழாசிரியர் பெயரோ உரிமையாளர் பெயரோ, வெளியிடும் அலுவலக முகவரியோ அதனுள் யாண்டும் காணக்கூடவில்லை.

இவ் விதழின் பெயர் தஹராலயம் என்பது. அடிகளாரின் 'தகராலய ரகசியம்' என்ற நூலே இவ் விதழின் பெயருக்குக் காரணமாய் அமைந்தது. ஆயினும் 'தகரம்' என்பது 'தஹரம்' என மாறியுள்ளமை காண்க. இவ் விதழ்க்கண் வரும் சில வடமொழிகளைக் காட்டுவல். (1) குஹேசன் (2) ஜயித்தல் (3) தமன பூஜை (4) மாச பூஜை (5) மேஷராசி (6) அனந்த விஜயம் (7) அக்னி (8) ஆதித்யன் (9) தூர்வாஸர் (10) ரிஷி (11) ராமபிரான் (12) ஏகரஸம் (13) மந்த்ரம் (14) சாஸ்திரங்கள் (15) வ்ரதம் (16) ஸ்தூலம் (17) ஸூக்ஷ்மம் (18) லக்ஷணம் (19) ஸத் (20) ஸோமலோகம்.

இவ்வாறு பல உள. தமிழ்நூன் முடிபுக்கு இயைய வந்துள வடசொற்கள் காட்டப்பட்டில. முதல் இதழாதலின் வடமொழி ஆற்றலைச் சிறிது சிறிதாகக் காட்டிப் பெருக்கும் முயற்சி புலனு கின்றது. இதழாசிரியர் வடமொழிச் சார்பினர் என்பதும் ஒரு பேராசிரியர் என்பதும் உரிமையாளர் ஒரு தமிழர் என்பதும் கேள்விப்பட்டேன்.

மேலும் பாம்பன் அடிகளாரின் கருத்தைப் பரப்பும் இதழ் எனற்கும் இடமில்லை. தகரம் என்பது நுட்பம் அல்லது உண் முளரிக்கண்ணதான நுண்மை என்றே அடிகளார் பொருள் கூறியுள்ளார். சிறுமை என்றும் ஈரிடங்களில் குறித்துள்ளார். இதழாசிரியரோ குகை என்று மாறுபடப் பொருள் உரைத்தார். தம் வரலாற்றில் பொய்யும் புளுகும் கலவாமை வேண்டி அடிகளாரே சைவப்பாதிரியார் ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்களைக் கொண்டு வரலாறு வெளிவரச் செய்தார். இதழில் வரும் வரலாறோ மண்ணையும் வானையும் ஒரே அடியால் கடக்கும் வன்மை கூடியது; புனைந்துரைகளே நிரம்பியது.

அடிகளாரைச் சார்ந்து நின்று தம் மொழியை வளம்படுத்திக் கொள்ளவே இதழை வெளியிடுகின்றனர் என்றே கருதுகின்றேன்.

4. தமிழ்க் காப்புக் கழகம்

இந் நிலையில் தமிழராவார் ஒன்று சேர்ந்து கழகத்தைத் தோற்றுவித்துத் தமிழைக் காக்க முன் வர வேண்டும். வெள்ளம் வருமுன் அணையிடல் வேண்டும். இன்றேல் மாயூரம் வேத நாயகம் பிள்ளையவர்கள் எழுதிய 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்ற நூலின் நடை மீண்டும் தமிழகத்தில் முளைத்துவிடும்.

கூட்டெழுத்துக்கள்

[புலவர். வீ. பொ. பழனிவேலனர்.]

இன்றைய தமிழ்ப் பேராசிரியர் சிலர் 'ஐ' 'ஔ' ஆகிய இரண்டு எழுத்துக்களும் கூட்டெழுத்துக்கள் என்கின்றனர். இக் கூற்று பொருந்துவதன்று.

'அ' முதல் 'ஔ' ஈருகவுள்ள 12 எழுத்துக்களும் உயிரெழுத்துக்கள் என்கிறோம்.

வேற்று மொழியினர் எவரும் உயிர் எழுத்தைக் கூட்டெழுத்தென்று கூறினரிலர். தமிழுக்கு மட்டில் உயிரெழுத்துக்களாகிய 'ஐ' 'ஔ' கூட்டெழுத்துக்களாவதெங்ஙனம்?

உயிரெழுத்துக்கள் ஒவ்வோர் ஒலியைக் குறிக்க உண்டாக்கப் பெற்றவையே. ஒலிவடிவத்திற்கு வரிவடிவம் கொடுத்ததே எழுத்து. தமிழ் எழுத்துக்களின் பிறப்பிலக்கணத்தைப் பார்க்க.

உயிர்மெய்யெழுத்துக்களைக் கூட்டெழுத்துக்கள் என்றால் ஓரளவு பொருந்தலாம். ஏனெனில், மெய்யெழுத்துடன் உயிரெழுத்தைக் கூட்டியே உயிர்மெய்யெழுத்து உண்டாக்கப்படுகிறது. ஆகவே, அது கூட்டெழுத்து.

ஆங்கிலத்தில் உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களுந்தாம் உண்டு; உயிர்மெய்யெழுத்துக்கள் இல்லை.

'a' யும் 'I' யும் தமிழில் ஐ, ஔ போன்று ஓரெழுத்தொரு மொழிகள்.

தமிழில் ஐ-யும், ஆங்கிலத்தில் I-யும் ஒலிக்குறிப்பெழுத்துக்களேயன்றிக் கூட்டெழுத்துக்களன்று.

ஐ-யை அ இ, 'அய்' எனவும், ஔவை அ உ, 'அவ்' எனவும் போலியாக எழுதப்படுபவை கூட்டெழுத்துக்களாம்.

'உயிர்' என்றால் 'மூச்சுவிடு' எனப் பொருள்படும். 'உயிர்த்தல்' எனின் மூச்சுவிடுதல் எனப் பொருள். 'உயிர்' என்பதை முதனிலைத் தொழிற்பெயராகக் கொண்டால் மூச்சுவிடுதல் என்று பொருள்கொள்ளலாம்.

ஒலி பிறப்பதற்கு மூச்சுவளி இன்றியமையாதது. இதனை உயிர்வளி எனவும் கூறுவர்.

உயிரெழுத்துக்கள் யாவும் ஒலி அடிப்படையில் தோன்றியவையே. ஓர் ஒலிக்கு ஒரு வடிவம் கொடுத்தனர். அங்ஙனம் 12 வகை ஒலிக்கும் 12 எழுத்துக்கள் உருவாயின. இவை கூட்டொலிகளுமன்று; கூட்டெழுத்துக்களுமன்று.

ஐ, ஒள ஒலிகளைக் கூட்டெழுத்துக்கள் என்பார் பிற பத்து உயிரெழுத்துக்களையும் ஏன் ஒதுக்கிவிட்டார்கள்? என விளங்கவில்லை. அவர்கள் குறி ஐ, ஒள இரண்டுமே.

'மெய்' உயிரின்றி இயங்காமையின் அதனை விட்டு விட்டார்கள். வாழ்க!

தமிழரைத் தம்வழித் திருப்ப இச் சூழ்ச்சியைக் கையாளுகின்றனர் போலும்.

அஇ, அய், அஉ, அவ் முறையே ஐ, ஒள ஒலிகளுக்குப் போலி ஒலிகள் என்று தொல்காப்பியமும், நன்னூலும் இயம்புவதை மறுத்து முற்கூறியவை முதலெழுத்துக்கள் என்றும் ஐ, ஒள போலிகள் என்றும் புகல்கின்றனர். தமிழ்நலம் பேணும் தமிழறிஞர் ஆராய்ந்து ஆவன கொள்க.

''பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே''

என்று பவணந்தியார் புறனடை கூறியிருப்பது நாமறிவோம். ஆனால், பகுத்தறிவுக்கொவ்வா வகையில் தாம் கொண்ட கருத்தை நிலைநாட்டப் புனைந்துரைத்துளர்.

இவர்கள் மதம் :

''தாஅன் நாட்டித் தனது நிறுப்பே.''

தலையாய செல்வம்

ரஷியா போன்ற நாடுகளோடு நாம் போர்க்கருவிகளிலே போட்டியிட இயலாது; அறிவியல் வளர்ச்சியில் போட்டியிட இயலாது; ஆனால் இலக்கியத்திலே போட்டியிட இயலும். அப்படிப்பட்ட இலக்கியச் செல்வம் நம்மிடத்தில் இருக்கிறது. அதில் தலையாய செல்வம் திருக்குறள்.

அந்தத் திருக்குறள் வகுப்பறையில் மட்டுமன்றி—நமது இல்லங்களில் மட்டுமன்றி—உலகத்தார் உள்ளங்களிலெல்லாம் பரவும் வகை செய்தல்வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா

ஆத்திசூடியின் அமைப்புமுறை

[டாக்டர். கு. மோகனராசு, சென்னை-5]

1. நோக்கமும் எல்லையும்

1.1. இரண்டு சீரான் அமைந்த அறிவுரைகளைக் கொண்ட அறிவுரைக் கொத்தாக விளங்குவது ஆத்திசூடி. இது, பெரும் பாலும் கட்டளை வாக்கியங்களான் அமைவது; சொல் ஆழம், எளிமை, நினைவு கொள்வதற்கு உரிய நிரல்முறை ஆகிய பண்பு நலன்களைப் பெற்று மிளிர்வது. இதற்கு வித்திட்டவர் 12ஆம் நூற்றுண்டினராகக் கருதப்படும் ஔவையார் ஆவார்.

1.2. ஔவையார் எழுதிய ஆத்திசூடியின் காப்புச்செய்யுள் 'ஆத்திசூடி' எனத் தொடங்குகின்றது ; அத் தொடக்கத் தொடரே நூலின் பெயராகவும் அமைந்தது என்பர். இது முதற்குறிப்பால் பெற்ற பெயர். கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை ஆகிய வையும் இவ்வாறே காப்புச் செய்யுள்களின் தொடக்கத் தொடர் களான் நூலுக்கு அமைந்த பெயர்களாகும்.

1.2.1. செய்யுளின் தொடக்கத் தொடராலும் நூலுக்குப் பெயர் வழங்கும் வழக்கு இருந்துள்ளது; பொன்வண்ணத்தந்தாதி என்னும் நூற்பெயரும், கொன்றை வேந்தனுக்கு 'அன்னையும் பிதா' என வேருெரு பெயர் வழங்கப்பட்டுள்ளதும்[1] இதற்குச் சான்றுகள் ஆகும்.

1.3. தமிழறிஞர்கள் பலரையும் ஈர்த்து, இன்று, தனித்த ஓர் இலக்கிய வகையாகவே 'ஆத்திசூடி' மலர்ந்து வருகின்றது. ஆகவே, இவ்விலக்கிய வகையின் அமைப்பை ஆராய வேண்டிய இன்றியமையாமை எழுந்துள்ளது. இவ்வாய்வில், ஆத்திசூடியின் முதல் (அல்லது இரண்டாவது) எழுத்துக்களின் அமைப்புமுறை மட்டுமே ஆராயப்படுகின்றது. இவ் வாய்வுக்குக் கீழ்வரும் 14 ஆத்திசூடிகள் அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றன.[2]

---

1. "பழைய உரைப் பிரதிகள், நூற்பெயர் கொன்றைவேந்தன் என்பதற்குப் பதிலாக 'அன்னையும் பிதா' என்ற தொடக்கத் தொடரை வைத்த நூலைக் குறிப்பிடுகின்றன"

—மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு—பன்னிரண்டாம் நூற்றுண்டு (முதல் பாகம்), காந்தி வித்தியாலயம், தஞ்சை, 1973, ப. 496.

2. பாரதிதாசன் அவர்களின் இரு ஆத்திசூடிகளையும் பூம்புகார் பிரசுரத்தார் 'பாரதிதாசன் ஆத்திசூடி' என்னும் பெயரில் வெளியிட்டுள்ளனர் (1980); ஏனைய 12 ஆத்திசூடிகளையும் ச. மெய்யப்பன் அவர்கள் தொகுத்துப் பதிப்பித்துள்ளார் (மணிவாசகர் நூலகம், 1980).

1.	அறவியல் சூடி	—	ச. மெய்யப்பன்
2.	ஆத்திசூடி	—	ஔவையார்
3.	ஆத்திசூடி	—	பாரதிதாசன்
4.	ஆய்வுசூடி	—	டாக்டர் தமிழண்ணல்
5.	இளையார் ஆத்திசூடி	—	பாரதிதாசன்
6.	தமிழ்சூடி	—	டாக்டர் வ. சுப. மாணிக்கம்
7.	நீதிசூடி	—	புலவர் சோம. இளவரசு
8.	நெறிசூடி	—	கவிஞர் நாரா. நாச்சியப்பன்
9.	புதிய ஆத்திசூடி	—	பாரதியார்
10.	புதிய ஆத்திசூடி	—	கவிஞரேறு வாணிதாசன்
11.	பொது நெறி	—	சுவாமி சுத்தானந்த பாரதியார்
12.	பொதுவுடைமை ஞான அறிவுசூடி ஆத்திசூடி	—	டாக்டர் ந. சஞ்சீவி
13.	முத்துச்சூடி	—	ரெ. முத்துக் கணேசன்
14.	வரதராசன் ஆத்திசூடி	—	வரதராசன்

2. எழுத்தமைப்பு

2. .0 ஆத்திசூடிகளில் காணும் முதல் (அல்லது இரண்டாவது) எழுத்துக்களின் அமைப்பை, எளிமை நோக்கி, நான்கு பகுதிகளாகப் பகுத்துக் கொள்ளலாம். 1. உயிர் எழுத்துக்கள், 2. ஆய்த எழுத்து, 3. மெய் எழுத்துக்கள், 4. உயிர்மெய் எழுத்துக்கள்.

2.1. பகுதி ஒன்று: உயிர் எழுத்துக்கள்

2.1.1. அ முதல் ஔ முடிய உள்ள பன்னிரண்டு உயிர் எழுத்துக்களை முதல் எழுத்துக்களாகக் கொண்ட அறிவுரைகள் பதினான்கு ஆத்திசூடிகளிலும் இடம் பெற்றுள்ளன. அவை அகர நிரலில் அமைக்கப்பட்டுள்ளன.

2.2. பகுதி இரண்டு ஆய்த எழுத்து

2. 2. 1. ஆய்த எழுத்து மொழி முதல் எழுத்தாக வருவது இல்லை. ஆகவே, அதனை இரண்டாம் எழுத்தாகக் கொண்ட அறிவுரைகள் எட்டு ஆத்திசூடிகளில் மட்டும் இடம் பெற்றுள்ளன. பாரதியார், பாரதிதாசன், வாணிதாசன், ச. மெய்யப்பன், சோம. இளவரசு ஆகியோரின் ஆத்திசூடிகளில் இப்பகுதி இடம் பெறவில்லை. பாரதிதாசன் மொழிமுதல் எழுத்துக்களை மட்டுமே அகர நிரல்படுத்தி ஆத்திசூடிகளைப் படைத்துள்ளதால், ஆய்த எழுத்தை இரண்டாம் எழுத்தாகக் கொண்ட அறிவுரை இடம் பெறவில்லை. மற்றவர்களின் ஆத்திசூடிகளில் ஆய்த எழுத்து இடம் பெறாமைக்குக் காரணம் தெளிவாகவில்லை.

2. 3. பகுதி மூன்று: மெய் எழுத்து

2. 3. 1. பாரதியார் வாணிதாசன் ஆகியோரின் ஆத்திசூடிகளிலும் பாரதிதாசனின் 'ஆத்திசூடி'யிலும் இரண்டாம் பகுதியொடு இம் மூன்றும் பகுதியும் இடம் பெறவில்லை; சுவாமி சுத்தானந்த பாரதியார், டாக்டர் ந. சஞ்சீவி ஆகியோரின் ஆத்திசூடிகளில் இம் மூன்றும் பகுதி மட்டும் இடம் பெறவில்லை.

2. 3. 2. ஔவையார் அவர்களின் ஆத்திசூடியில், க முதல் ன முடிய உள்ள அகரம் ஏறிய உயிர்மெய்கள் பதினெட்டையும் அகர நிரலில் கொண்ட அறிவுரைகள் இடம் பெற்றுள்ளன. இப் பதினெட்டு உயிர் மெய்களுள் க, ங, ச, ஞ, த, ந, ப, ம, வ ஆகியவை அறிவுரைகளின் முதல் எழுத்துக்களாகவும் ட, ண, ய, ர, ல, ழ, ள, ற, ன ஆகியவை அறிவுரைகளின் இரண்டாம் எழுத்துக்களாகவும் அமைந்துள்ளன. இவ்வமைப்பு முறையை நாரா. நாச்சியப்பன், வரதராசன், ரெ. முத்துக் கணேசன் ஆகியோர் அப்படியே பின்பற்றியுள்ளனர். ரெ. முத்துக் கணேசன் அவர்களின் முத்துச்சூடியில் ஙகரத்தை முதல் எழுத்தாகக் கொண்ட அறிவுரை மட்டும் இடம் பெறவில்லை.

2. 3. 3. ச. மெய்யப்பன் அவர்களின் அறவியல் சூடியில் க, ச, த, ந, ப, ம, வ ஆகிய உயிர்மெய்களை முதல் எழுத்துக்களாகக் கொண்ட அறிவுரைகளும், ங், ஞ், ட், ண், ய், ர், ல், ழ், ள், ற், ன் ஆகிய மெய் எழுத்துக்களை இரண்டாம் எழுத்துக்களாகக் கொண்ட அறிவுரைகளும் இடம் பெற்றுள்ளன.

2. 3. 4. பாரதிதாசனின் இளையார் ஆத்திசூடியில் க, ச, த, ந, ப, ம, வ என்னும் ஏழு உயிர்மெய்களை முதல் எழுத்துக்களாகக் கொண்ட அறிவுரைகள் மட்டும் நிரல் பெற்று அமைந்துள்ளன. மேற்சுட்டிய ஏழு உயிர் மெய்களும் மொழி முதலில் வரும் அகரம் ஏறிய உயிர்மெய்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

2. 3. 5. புலவர் சோம. இளவரசு அவர்களின் நீதிசூடியில் முதல் பகுதியை அடுத்து, பதினெட்டு மெய்யெழுத்துக்களையும் இரண்டாம் எழுத்துக்களாகக் கொண்ட அறிவுரைகள் இடம் பெற்றுள்ளன. டாக்டர் வ. சுப. மாணிக்கம், டாக்டர் தமிழண்ணல் ஆகியோரின் ஆத்திசூடிகளில் இரண்டாம் பகுதியை அடுத்து, பதினெட்டு மெய்யெழுத்துக்களையும் இரண்டாம் எழுத்துக்களாகக் கொண்ட அறிவுரைகள் இடம் பெற்றுள்ளன. இம் மூன்று ஆத்திசூடிகளிலும் மெய்யெழுத்துக்கள் நெடுங்கணக்கு நிரல் பெற்றே அமைந்துள்ளன.

2. 3. 6. இவ்வாறு ஏழுவகை அமைப்பு முறைகள் இம் மூன்றும் பகுதியில் காணப்படுகிறன. முதல் பகுதியில் உயிர் எழுத்துக்களும் இரண்டாம் பகுதியில் ஆய்த எழுத்தும் நான்காம் பகுதியில் உயிர்மெய் எழுத்துக்களும் நிரல் பெற்று அமைவதால், இம் மூன்றும் பகுதியில் மெய் எழுத்துக்கள் நிரல் பெற்று அமைவதே தக்க அமைப்பு முறையாகும்.

2. 4. பகுதி நான்கு: உயிர்மெய் எழுத்துக்கள்

2. 4. 1. உயிர்மெய் எழுத்துக்கள் மொத்தம் 216. இவற்றுள் 81 உயிர்மெய் எழுத்துக்களை மொழி முதல் எழுத்துக்களாகத் தொல்காப்பியம் வரையறுக்கிறது.[3] இம் மொழிமுதல் எழுத்துக்களுள் ஔகாரம் ஏறிய உயிர்மெய்களையும் ஞா, ஞெ, ஞொ, யா ஆகிய உயிர்மெய்களையும் முதல் எழுத்துக்களாகக் கொண்ட அறிவுரைகள் அருகியே வந்துள்ளன. இதற்கு அடிப்படைக் காரணம், இவ் வெழுத்துக்களை மொழிமுதலாக் கொண்ட சொற்கள் எண்ணிக்கையளவில் மிகக் குறைந்து இருப்பதே.

2. 4. 1. 1. பாரதியார் அவர்களின் புதிய ஆத்திசூடியில் பை, மை ஆகிய எழுத்துக்களை முதலாகக் கொண்ட அறிவுரைகள் இடம் பெறவில்லை; பாரதிதாசன் அவர்களின் ஆத்திசூடியில் வ என்னும் எழுத்தை முதலாகக் கொண்ட அறிவுரையும், இளையார் ஆத்திசூடியில் சு, சூ, ம, மொ ஆகிய எழுத்துக்களை முதலாகக் கொண்ட அறிவுரைகளும் இடம் பெறவில்லை; சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்களின் பொது நெறியில் போ என்னும் எழுத்தை முதலாகக்கொண்ட அறிவுரை இடம் பெறவில்லை; டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்களின் தமிழ்சூடியில் டமெ என்னும் எழுத்தை முதலாகக் கொண்ட அறிவுரை இடம் பெறவில்லை; கவிஞர் நாரா. நாச்சியப்பன் அவர்களின் நெறி சூடியில் நீ என்னும் எழுத்தை முதலாகக் கொண்ட அறிவுரை இடம் பெற வில்லை; இவற்றிற்கான காரணம் புலனாகவில்லை.

---

3. தொல்காப்பியம் காட்டும் மொழிமுதல் எழுத்துக்கள்

க், த், ந், ப், ம் x 12 உயிர்கள்	=	60
ச் x அ, ஐ, ஔ நீங்கிய ஒன்பது உயிர்கள்	=	9
வ் x உ, ஊ, ஒ, ஓ நீங்கிய எட்டு உயிர்கள்	=	8
ஞ் x ஆ, எ, ஒ என்னும் மூன்று உயிர்கள்	=	3
ய் x ஆ மட்டும்	=	1
மொத்தம்	=	81

2. 4. 2. தொல்காப்பியம், மொழிமுதல் எழுத்துக்கள் என வரையறுக்காத ச, சை, சௌ, ஞ, ஞி, ய, யு, யூ, யோ, யௌ ஆகியவற்றை முதலெழுத்துக்களாகக் கொண்ட அறிவுரைகள் பல, ஆத்திசூடிகளில் இடம் பெற்றுள்ளன. மேற்சுட்டிய உயிர்மெய் எழுத்துக்கள் தொல்காப்பியருக்குப் பின்வந்த இலக்கணிகளால் மொழிமுதல் எழுத்துக்களாகக் கொள்ளப்பட்டுள்ளன.

2 4. 3. பாரதியார் அவர்களின் புதிய ஆத்திசூடியில், இலக்கணிகள் மொழிமுதல் எழுத்துக்களாக ஏற்காத ர, ரா, ரீ, ரு, ரூ, ரே, ரோ, ரௌ, ல, லா, லீ ஆகியவற்றை மொழிமுதலாகக் கொண்ட அறிவுரைகள் இடம் பெற்றுள்ளன. இதன் தாக்கம் டாக்டர் ந. சஞ்சீவி அவர்களின் பொதுவுடைமை ஞான அறிவு சூடியிலும் இடம் பெற்றுள்ளது. இவரின் ஆத்திசூடியில் ர, ரா, ரோ, ரௌ, லா, லீ, லே, லௌ ஆகியவற்றை மொழிமுதலாகக் கொண்ட அறிவுரைகள் இடம் பெற்றுள்ளன.

2. 4. 4. மொழிமுதல் உயிர்மெய் எழுத்துக்களை முதலாகக் கொண்ட அறிவுரைகளில் விதிவிலக்காக ஒரு சில நுட்ப வேறுபாடுகளும் காணப்படுகின்றன.

2. 4. 4. 1. பாரதியார் அவர்களின் புதிய ஆத்திசூடியில் தௌ என்னும் எழுத்தை முதலெழுத்தாகக் கொண்டு அமைய வேண்டிய அறிவுரைக்குப் பதிலாகத் 'தவத்தினை நிதம்புரி' (53) என்னும் அறிவுரை அமைந்துள்ளது; டாக்டர் தமிழண்ணல் அவர்களின் ஆய்வுசூடியில் 'ஞெகிழிபோல் பற்றுக' (59) என்னும் அறிவுரையை அடுத்து 'நேயமுடன் அணுகு' (60) என்னும் அறிவுரை இடம் பெற்றுள்ளது.

2. 4. 4. 2. வு, வூ, வொ, வோ என்னும் உயிர்மெய் எழுத்துக்கள் மொழிமுதல் எழுத்துக்களாக வருதல் இல்லை; ஔவையார் இந்நான்கு எழுத்துக்களுக்குப் பதிலாக முறையே உ, ஊ, ஒ, ஓ என்னும் நான்கு எழுத்துக்களைக் கொண்டு அறிவுரைகள் வழங்கி உள்ளார். இவ்வெழுத்து அமைப்பு முறை பொருத்தம் உடையது அன்று. ஔவையாரின் இவ்வமைப்பு முறையை வரதராசன் அவர்கள் அப்படியே பின்பற்றி உள்ளார்கள்.

2. 4. 5. ஔவையார், பாரதியார், சுவாமி சுத்தானந்த பாரதியார், டாக்டர் ந. நஞ்சீவி, ரெ. முத்துக் கணேசன் ஆகியோர் தவிர்த்துப் பிறருடைய ஆத்திசூடிகளில், மொழிமுதல் உயிர்மெய் எழுத்துக்களை மட்டுமே நிரல்பெற அமைத்தல் வேண்டும் என்னும் எண்ணமே மேலோங்கி நிற்கின்றது. எனினும் அகர நிரலில், மொழிமுதல் வாரா உயிர்மெய் எழுத்துக்களைச் சேர்ப்பது பற்றியும் கருத வேண்டியுள்ளது.

2.4.5.1. மொழிமுதலில் வருதல் இல்லாத ஆய்த எழுத்தை இரண்டாம் எழுத்தாகக் கொண்ட அறிவுரைகள் ஆத்திசூடிகளில் இடம் பெற்றுள்ளன; மொழிமுதலில் வருதல் இல்லாத அகரம் ஏறிய உயிர்மெய்களையும் மெய் எழுத்துக்களையும் இரண்டாம் எழுத்துக்களாகக் கொண்ட அறிவுரைகளும் ஆத்திசூடிகளில் இடம் பெற்றுள்ளன; ஆகவே, மொழிமுதலில் வாரா உயிர்மெய் எழுத்துக்களை இரண்டாம் எழுத்துக்களாகக் கொண்ட அறிவுரைகளை மூன்றும் பகுதியில் அகர நிரலுக்குத் தக அமைப்பதில் தவறில்லை என்றே தோன்றுகின்றது. இம் முயற்சியைச் சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்கள் ஓரளவு மேற்கொண்டுள்ளார்கள்; ரெ. முத்துக் கணேசன் அவர்கள் கடைசி அறிவுரையில் மட்டும் இம்முயற்சியை மேற்கொண்டுள்ளார்கள். இவ்வாறு, மொழிமுதல் வாரா உயிர்மெய் எழுத்துக்களை இரண்டாம் எழுத்துக்களாகக் கொண்ட அறிவுரைகளைச் சேர்ப்பதன் வழி ஒவ்வோர் ஆத்திசூடியிலும் உள்ள அறிவுரைகளின் எண்ணிக்கையை ஏறத்தாழ இரட்டிப்பாக்கலாம். வேண்டுமானால், அகர நிரலில் அமையும் எல்லா எழுத்துக்களையும் அச்சுவழி வேறுபடுத்தியும் காட்டலாம். இவ்வாறு செய்வதால் மொழி முதல் எழுத்துக்கள், மொழி முதல் வாரா எழுத்துக்கள் பற்றிய தெளிவும் கிடைக்கும்.

2.5. முடிவுரை

2.5.1. ஆத்திசூடிகளின் எழுத்தமைப்பு முறை தமிழ் நெடுங்கணக்கை அடிப்படையாகக் கொண்டதாகும். அவற்றுள், மொழிமுதல் எழுத்துக்கள் அறிவுரைகளின் முதல் எழுத்துக்களாக அமையும்; மொழிமுதல் வாரா எழுத்துக்கள் அறிவுரைகளின் இரண்டாம் எழுத்துக்களாக அமையும்.

2.5.2. இவ்வமைப்பு முறையையே மேலும் விரிவுபடுத்தின், அகர முதலிகளின் எழுத்தமைப்பு முறையில் ஆயிரக் கணக்கான அறிவுரைகளைக் கொண்ட அறிவுரைக் களஞ்சியங்களை உருவாக்கலாம். மேலும், ஒவ்வொரு துறைக்கும் – ஒவ்வொரு துறையிலுள்ள பிரிவுகளுக்கும் தனித்தனி ஆத்திசூடிகள் உருவாக்கலாம். இவ்வாறு உருவாக்கினால், பல்துறை அடிப்படை அறிவை ஓரளவேனும் தமிழில் சுருங்கிய வடிவில் பெற முடியும்; பல்துறை இணைப்புகள் உருவாகும்; சிந்தனை விரிவு பெறும்; தமிழ் வளம் பெறும்.

உலகைச் சுற்றிவரும் உரோகிணி

விண் வெளியில் செயற்கைக் கோள்களைச் செலுத்தி ஆராய்ச்சிகள் நடத்தும் முயற்சியில் இந்தியா வல்லரசுகளுடன் போட்டியிடும் அளவுக்கு முன்னேறி வருகின்றது என்பதற்குக் கடந்த சூலைத் திங்கள் 18 ஆம் நாள் இந்தியா விண் வெளிக்கு அனுப்பிய "உரோகிணி" என்னும் செயற்கைக் கோள் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

இந்திய அறிவியல் வல்லுனர்களின் அயராத முயற்சியின் விளைவாக விண்வெளியில் செலுத்தப்பட்ட இச்செயற்கைக் கோள் மூன்றாவது கோளாகும். 1975 ஆம் ஆண்டில் 'ஆரியபட்டா' என்னும் செயற்கைக் கோளினையும், 1979 இல் 'பாஸ்கரா' என்னும் செயற்கைக் கோளினையும் செலுத்தினர். அவ்விரு கோள்களும் உரோகிணியைவிட எடையில் பெரியவை, ஆனல் உரோகிணி 35 கிலோ கிராம் எடையே உள்ளது. அதினினும் இக் கோள் மிக வெற்றிகரமாக உலகைச் சுற்றி வருகிறது.

முன்னர் விடுக்கப்பெற்ற செயற்கைக்கோள்கள் இந்தியாவில் உருவாக்கப்பட்டன. மேலும், அவை உருசிய 'ராக்கெட்' செலுத்தும் நிலையத்தினின்றே செலுத்தப்பட்டன. ஆனல் உரோகிணி இந்தியாவில், சென்னைக்கு 100 கி. மீ தொலைவிலுள்ள சிஹரிக்கோட்டா என்னும் ஆந்திர மாநிலத்திலுள்ள ஓர் இடத்தினின்று செலுத்தப்பட்டது. S. L. U-3 என்னும் விண்வெளிக் கலத் (Rocket) தின் உதவியால் செலுத்தப்பட்ட இக் கோள் 90 நிமிடத்திற்கொருமுறை உலகைச் சுற்றி வந்துகொண்டிருக்கிறது.

இதுகாறும் அமெரிக்கா, உருசியா, சீன, சப்பான், பிரான்சு ஆகிய ஐந்து நாடுகள் செயற்கைக் கோளினைச் செலுத்தியுள்ளன. இம்முயற்சியில் இந்தியா ஆருவது இடத்தைப் பெற்றிருக்கிறது. இச் செயற்கைக் கோளினை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்ட அறிவியல் தொழிலாளிகளின் எண்ணிக்கை ஆணும் பெண்ணுமாக 7,000 பேராகும். இதற்குச் செலவான தொகை 22.5 கோடி ரூபாயாகும்.

செய்திகளும் குறிப்புக்களும்

இரண்டாவது உலக சைவத் தமிழ் மாநாடு

திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பில் 9—7—80 இல் திருநெல்வேலிச் சந்திப்பு, நெல்லைச் சங்கீத சபாவில், நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமிகு டி. எஸ். செல்வராஜ், ஐ. ஏ. எசு. அவர்கள் தலைமையில் இரண்டாவது உலக சைவத் தமிழ் மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஓய்வு பெற்ற மதுரை ஆலை மேலாளர் திருமிகு வை. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்தனர். திரு. எஸ். கலியாணசுந்தரம் பிள்ளை அவர்கள் வரவேற்புரை

நிகழ்த்தினர். மற்றும் சமய நிறுவனங்கள் பலவும் வரவேற்புகள் வழங்கின. ஆதீனத்தலைவர்கட்குத் திரு. மு. சு. சங்கர் வரவேற்பு மடல் படித்தளித்தார். புலவர் ம. சிவசம்பு பி. லிட்., பேராசிரியர் ந. பாலுசாமி, எம். ஏ., எம். லிட்., புலவர் கிரன், எம். ஏ. பி. லிட்., ம. சு. சங்கர் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். சைவ மங்கையர்ப் பேரவை சார்பில், திருமதி செல்லப்பாப்பா கிரன் கொக்கிர குளம் மங்கையர்க்கரசி மாதர் மன்றத்தின் சார்பில் செல்வி சிவகலா ஆகியோரும் வரவேற்பு மடல்கள் படித்தளித்தனர். திருவாளர்கள் டி. எஸ். செல்வராஜ், வை. ஆறுமுகம் பிள்ளை, மு. சு. சங்கர், ம. சிவசம்பு, சொக்கலிங்கம் பிள்ளை ஆகியோர்க்குச் சிவத்திரு சுப்பிரமணியத் தம்பிரான் பட்டாடை போர்த்தி வாழ்த்தியருளினர். திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் சீலத்திரு. அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அருள் வாழ்த்து வழங்கினர். திரு. மு. சு. சங்கர் நன்றி நவில மாநாடு இனிது முடிந்தது.

அரியலூர் மணிவாசக மன்ற விழாக்கள் :

சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை விழா :

21—7—80 இல் அரியலூர் சிவாலயத்தில் நடைபெற்றது. புலவர் வி. சீனிவாச முதலியார், எம். ஏ., பி. டி. அவர்கள் தலைமை தாங்க இர. கதிர்வேலர் அவர்கள் 'சுந்தரரும் இராமலிங்கரும்' என்னும் பொருள் பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்கள். புலவர் திரு ரா. சிவப்பிரகாசம் பிள்ளை நன்றி நவில விழா இனிது நிறைவேறிற்று.

மணிவாசக மன்றத்தின் 37 ஆவது ஆண்டு நிறைவு விழா :

14, 15—7—80 இல் அரியலூர் பெருமாள் கோயிலில் தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள் தலைமையில் மணிவாசக மன்றத்தின் 37 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், மாணிக்கவாசக அடிகளின் குருபூசை விழாவும் முறையே சிறப்பாக நடைபெற்றன. புலவர் திரு. வி. சீனிவாச முதலியார் அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்து வரவேற்புரையாற்றினர். தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள் 'அம்மையப்பர்' என்னும் பொருள் பற்றியும், குடந்தை பண்ணாராய்ச்சி வித்தகர் திரு. ப. சுந்தரேசனார் அவர்கள் 'ஏழிசையும் இசைப் பயனும்' என்னும் பொருள் பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

15—7—80 இல் டி. எஸ். வெங்கட்ராம ஐயர், பி. ஏ., பி. எல் அவர்கள் தொடக்கவுரை ஆற்ற, தவத்திரு சுவாமிகள் 'மணிமொழியின் தனிச் சிறப்பு' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்ற மாணிக்கவாசகர் குருபூசை விழா இனிது நடைபெற்றது.

அடுத்து திரு. எம். மீனாட்சி சுந்தரம், பி. ஏ., பி.எல். அவர்கள் சாத்திர விழாவினைத் தொடங்கி வைத்தார்கள். தவத்திரு. சுவாமிகள் 'முப் பொருள்' என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினர். திரு. ஏ. சோமசுந்தரம் பிள்ளை நன்றி கூறினார்.

தமிழ்ச் சொல்லாக்க மன்ற முதற் கூட்டம்

பல்வேறு துறைகளிலும் இதுகாறும் செய்யப்பட்டுள்ள கலைச் சொல்லாக்கங்களை மதிப்பிடுதற்கும் புதிய சொல்லாக்கங்களை அவ்வத் துறைகளோடு தொடர்புபடுத்தித் தமிழ் வளர்ச்சியை விரைவுபடுத்துதற்கும் நிறுவப்பட்டதே இச் சொல்லாக்க மன்றம். மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களைத் தலைவராகவும் ஆட்சி மொழிக் காவலர் கீ. இராமலிங்கனார், திரு கோ. முத்துப் பிள்ளை ஆகியோர் துணைத்தலைவர்களாகவுமிருந்து இம் மன்றத்தை ஆற்றுப்படுத்துகின்றனர். மன்றத்தின் செயலாளராகத் திரு. இரா. மதிவாணன், க. மு. அவர்கள் இருப்பார். இம் மன்றத்தின் முதற் கூட்டம் 17—7—80 இல் சென்னை, அண்ணா சாலையிலுள்ள நடுவண் மாவட்ட நூலகக் கட்டிடத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

குழந்தை எழுத்தாளர் சங்கம் :

30 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், தி. ஜ. ர. நினைவுச் சொற்பொழிவும்

20—7—80 இல் சென்னைத் தேனாம்பேட்டை எல்டாம்ஸ் சாலையிலுள்ள கிறித்தவக் கலை-இலக்கிய மன்றத்தில், குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், திரு. தி. ஜ. ர. அவர்களின் நினைவுச் சொற்பொழிவும் திரு. வி. இராமமூர்த்தி அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றன.

மறைமலையடிகள் நூல் நிலைய நூலகர் திரு. இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப். அவர்கள் "என். கே. வேலன் அவர்களின் குழந்தை இலக்கியப் பணிகள்" என்னும் தலைப்பில் அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினர். திரு. கே. ஆர். வாசுதேவன் அவர்கள் "குழந்தை இலக்கியம் ஒரு கண்ணோட்டம்" என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினர். சங்கச் செயலர் நன்றி நவில விழா இனிது முடிந்தது.

பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் விழா :

15—7—80 இல் தமிழ் நாடு அரசின் சார்பில் சென்னைக் கலைவாணர் அரங்கில், பெருந்தலைவர் காமராசர் அவர்களின் 78 ஆவது பிறந்த நாள் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. சட்ட மன்ற மேலவைத் தலைவர் முனைவர், ம. பொ. சிவஞானம் அவர்கள் விழாவைத் தொடங்கிவைத்தனர். திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது. அதில் அரசியல் தலைவர்களும் தமிழறிஞர்களும், உரையாற்றினர். மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் சிறப்புரை ஆற்றினர். மாண்புமிகு முதல்வர் ம. கோ. இராமச்சந்திரன் அவர்கள் நிறைவுரை ஆற்ற விழா இனிது முடிந்தது.

பெரியார் ஒலி - ஒளி அரங்கக் காட்சிகள் துவக்க விழா

20—7—80 ஞாயிறு மாலை 7-30 மணிக்குத் தஞ்சை அரண்மனைத் திடலில், சீர்திருத்தக் தந்தை பெரியார் அவர்கள் வாழ்க்கையினைச் சித்திரிக்கும் ஒலி-ஒளி அரங்கக் காட்சிகள் துவக்க விழா நடைபெற்றது. மேதகு தமிழ்நாடு ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் விழாவைத் துவக்கி வைத்தார்கள். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் இராம வீரப்பன் அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினர். மாண்புமிகு அமைச்சர் எஸ். டி. சோமசுந்தரம் அவர்களும், திருமதி கோமதி சீனிவாசன் அவர்களும் சிறப்புரை ஆற்றினர்.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத்துறை

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத் துறையின் சார்பில் பன்மொழி பல்கலைத் தமிழாய்வுக் கருத்தரங்குகள் முறையே ஆகஸ்ட்டுத் திங்கள் 4, 11, 18, 25 ஆம் நாள்களில் மாலை 4 மணி முதல் 5 மணி வரை நடைபெறுகிறது. முறையே டாக்டர் மெ. சுந்தரம், பேராசிரியர் பொன்னு ஆ. சத்திய சாட்சி, திருமதி ரெஜினு வின்சன், டாக்டர் இரா. குமாரவேலன் ஆகியோர் தலைமையில் டாக்டர் ச. சு. இளங்கோ, புலவர் மு. தெய்வநாயகம், திரு. க வெங்கடேசன், திரு கோமல் சுவாமிநாதன் ஆகியோர் முறையே பாரதிதாசன்; திருக்குறளும் பைபிளும்; நாட்டுப்புற நன்மருந்துகள், நாடகங்களும் திரைப்படங் களும் என்னும் பொருள்கள் பற்றி ஆய்வுரை வழங்குவர்.

பெண்ணாடத்தில் சுந்தரர் விழா

பெண்ணாடத்தை அடுத்துள்ள ஆவினன்குடி அரசினர் உயர்நிலைப் பள்ளியில் 22—7—80 இல் தலைமை ஆசிரியர் திரு க. வடிவேல் பிள்ளை அவர்கள் தலைமையில் சுந்தரர் விழா நடைபெற்றது. சிவ. பழமலை வரவேற்புரை நிகழ்த்தினர். திருப்பனந்தாள் பேராசிரியர் சுந்தரேசம் பிள்ளை ''நம்பியாண்டார் நம்பி'' என்னும் பொருள் பற்றிப் பேசினர். திரு. ச. சிவராம சேது, பி. எசி. நன்றி நவில விழா இனிது முடிந்தது.

மறைமலையடிகள் நூல்நிலைய வளர்ச்சிக்கு நன்கொடை

(செல்வி சிலம்பு, ௫௪-௫௫ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர்திரு.	வ. சுப்பையா பிள்ளை அவர்கள் கழக ஆட்சியாளர் ரூ.	10—00
,,	ஆ. சுப்பையாபிள்ளை அவர்கள், கழக மேலாளர்	5—00
,,	A. T. A. ஈசுவர் அவர்கள், சென்னை	5—00
,,	தனசேகரன், பெங்களூர்	5—00

மதிப்புரை

வள்ளுவர் வினவிய வினாக்கள்

[தொகுப்பாசிரியர் : மு. சதாசிவம், எம்.ஏ., எம்.லிட்., டிப். லிங். அனைத்துலகத் திருக்குறட் கழகம், 3, மண்டபவீதி, ஈரோடு. விலை 60 காசு.]

திருவள்ளுவர் ஒரு சிறந்த சிந்தனையாளராகையால், தமது திருக்குறளில் ஆங்காங்கே சில வினாக்களை எழுப்பி நம்மைச் சிந்திக்க வைக்கிறார். அங்ஙனம் அவர் தொடுக்கும் வினாக்களைக் கூர்த்தறிந்து 69குறட்பாக்களைத் தேர்ந்தெடுத்துப் புதிய முறையில் திருக்குறட் கருவூலத்தைச் சுவைக்கச் செய்யும் இந் நூலாசிரியரின் முயற்சி பாராட்டத்தக்கது.

திருக்குறளின் திறவுகோல்

[ஆசிரியர் : சிந்தனைச் செம்மல் கு. ச. ஆனந்தம், பி.காம்., பி.எல். சிவலிங்க நூற்பதிப்புக் கழகம், 3 மண்டபவீதி, ஈரோடு, 638001; விலை ரூ. 4-00]

கற்றனைத்தூறும் அறிவுக் கேணியாக விளங்கும் திருக்குறளைப் பல கோணங்களினின்று ஆராய்ந்து, அரசியல், பொருளியல், குமுகாயம் ஆகிய துறைகள் பற்றிய பயனுள்ள புதிய கருத்துக்களைத் தருவதே இற்றை நாள் ஆசிரியர்களின் இன்றியமையாக் கடமையாகும். அஃதொன்றே சீரிய திருக்குறட்பணி. அதைத்தான் ‘திருக்குறளின் திறவுகோல்’ என்னும் இந் நூலின் வழி செய்துள்ளார் இந் நூலாசிரியர். ஆணித்தரமான கடா விடைகள் மூலம் தம்முடைய கருத்துக்களை நிறுவியுள்ள ஆசிரியரின் முயற்சி பாராட்டத்தக்கது.

வரப் பெற்றோம்

ஸ்ரீ ஜயசுடபிரமணிய சுவாமி அந்தாதி விலை : ரூ. 1-00

ஸ்ரீ மாருதி அந்தாதி விலை : ரூ. 1-00.

[ஆசிரியர் : வித்யாரத்ன, கலைமாமணி, கற்பகக் கவியரசு ஸ்ரீசுத்த சத்வானந்தா, (என். எஸ். சிதம்பரம்) கிடைக்குமிடம் : 14 சிங்காரி நாயக்கன் தெரு, மயிலாப்பூர் சென்னை-4]

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 80, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : வ. சுப்பையா

பதிவு எண் : M. 4899

கழகம் வெளியிட்டுள்ள அறிவியல் நூல்கள்

ஆசிரியர் என். கே. வேலன்

மண்ணும் விண்ணும்	3	00
இயற்கையும் செயற்கையும்	4	50
உயிர்க்காட்சிச்சாலை	3	50
சர்க்கஸ்	5	00
மின்சாரத்தின் கதை (தமிழக அரசின் பரிசு பெற்ற நூல்)	3	50
ஆற்றின் கதை	4	00
கடலின் கதை	5	00
காற்றின் கதை	2	00
மலையின் கதை	5	00
பூமியின் கதை	5	00
உப்பின் கதை	5	00
நீரின் கதை	3	00
கல் எண்ணெயின் கதை	4	50
தாளின் கதை	5	00
ரப்பர் கதை	3	00
நிலக்கரியின் கதை	5	00
பறவைகளின் கதை	4	00
அறிவு வளர்ச்சிக் கதைக் கொத்து 1, 2, 3 பகுதிகள் (தனித்தனி)	5	00
அறிவியற் கதைக் கொத்து	5	00
அறிவியல் வளர்ந்த கதை	4	00
உங்களுக்குத்தெரியுமா?	3	75
ஏன் ? என்ன ? எப்படி ?	3	50

பேராசிரியர் : ந. சுப்புரெட்டியார், எம். ஏ. பி. எசி. பி.டி.

இளைஞர் வானொலி	4	00
இளைஞர் தொலைக் காட்சி	5	00
அதிசய மின்னணு	5	00
இராக்கெட்டுகள் (தமிழக அரசின் பரிசு பெற்ற நூல்)	5	00
விஞ்ஞான நூற்கொத்து பகுதி I	9	00
விஞ்ஞான நூற்கொத்து பகுதி II	7	50
நமது உடல் (அச்சில்)		
அம்புலிப் பயணம்	6	00
தொலை உலகச் செலவு	7	50

மறுபதிப்பு நூல்கள் :

சைவசித்தாந்தக் கருத்துக்களை சுருங்கச்சொல்லி விளங்க வைக்கும் அரிய நூல்கள்

உயிரட்டவணை என வழங்கும் பூப்பிள்ளை அட்டவணை	0	70
திரிபதார்த்த சிந்தனை (முப்பொருள் விளக்கம்)	1	00
நமச்சிவாயமாலை	1	25
சைவசித்தாந்த உண்மை வரலாறு —கா. சுப்பிரமணிய பிள்ளை	0	85